Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 9 ஆம் நாள் ஷவ்வால் 15 (22-3-62) வியாழக்கிழமை இதழ் 40




# ஸ்ரீ வழக்கில் எதிரி விடுதலை

## மற்றும் 7 வழக்குகள் வேறு கோர்ட்டுகளில் விசாரிக்கப்படும்

## யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டுவந்த 'ஸ்ரீ' வழக்கில் எதிரியான பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தின் கார் சாரதி திரு. கந்தசாமி வேலும்மயிலும் நேற்று விடுதலை செய்யப்பட்டார். முடிக்குரிய தரப்பினர் குற்றச்சாட்டை ருசுப்படுத்தத் தவறியதாகத் தெரிவித்து மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

இதே குற்றச்சாட்டின்மீது வேறும் 7 பேர்மீது தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளும் நேற்று வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இந்த வழக்குகளின் விசாரணைகளை வேறும் மாஜிஸ்டிரேட்டுகளினால் விசாரணை செய்ய வேண்டுமெனக் கூறித் தவணை போடப்பட்டது.

1951-ம் ஆண்டின் 14-ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச்சட்டத்தின் 24-வது விதியின் 2-ம் பிரிவுக்கு மாருக மோட்டார் வாகனத்தின் அடையாள இலக்கத் தகட்டில் புரியாதபடி மாற்றஞ் செய்ததாக திரு. கந்தசாமி வேலும்மயிலும் மீதும் வேறு ஏழுபேர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டன.

2 ஸ்ரீ 1577 இலக்கமுடைய மோட்டார் கார்தான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனம் என்பதை செசி, அடையாள இலக்கத்தகடு ஆகியவற்றைக் கொண்டு முடிக்குரிய தரப்பினர் நிருபிக்கவில்லையென மாஜிஸ்டிரேட் தமது தீர்ப்பில் கூறினர்.

மற்றும் ஏழுபேர்மீது இதே குற்றச்சாட்டின்மீது தொடரப்பட்ட வழக்குகளில் பல விசாரணைகள் யாழ்ப்பாணம் உதவி மாஜிஸ்டிரேட் முன்னிலையிலும் விசாரணை செய்யப்படவிருக்கின்றன.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபயசூரியா ஆஜராகியிருந்தார்.

எதிரிகள் சார்பில் திரு. எம். திருச்செல்வம் கியூ. சி. திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், ஏ. அமிர்தலிங்கம், டி. கணேசலிங்கம், கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். நடராசா, ஆர். விசுவநாதன், வி. நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தனர்.

இளம்பிள்ளை வாதம்:

# ஐஸ்கிரீம் விற்பனையை தடுக்க யாழ். மேயர் உத்தரவு

## கொழும்பில் சகல பாடசாலைகள் மூடப்படுகின்றன

யாழ்ப்பாணம், புதன்

சிறுபிள்ளை வாத நோய் பரவுவதற்கு கண்டபடி தயாரிக்கும் ஐஸ்கிரீமும் ஒரு காரணமாயிருக்கிறதென கண்டுபிடிக்கப்பட்டதன் பேரில் பாடசாலைகளுக்கு முன்பும், தெருக்களிலும் ஐஸ்கிரீம் விற்பதைத் தடை செய்யுமாறு மேயர் திரு. ஜேக்கப், யாழ்ப்பாணம் சுகாதார அதிகாரிக்குக் கட்டளையிட்டுள்ளார்.

இந்த நோய் காரணமாக கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள சகலபாடசாலைகளையும் உடனடியாக (தற்காலிகமாக) மூடும்படி கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். சமீபத்தில் நடைபெறவிருக்கும் தவணைப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்படும்.

ஜனவரிமாதம் முதல் இந்த நோய் அதிகமாகப் பரவியிருக்கிறதென்றும், 137 பேர் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாயும் சுகாதார இலாகா அறிவித்துள்ளது. பிரிட்டனிலிருந்து வந்துள்ள தடுப்பு மருந்து இப்போது உபயோகிக்கப்பட்டு வருகிறது. லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் தடுப்பு மருந்து போடப்பட்டு வருகிறது.

—

## 3 உயர்தர கமிட்டிகள் நியமிக்கப்படும்

### அரசாங்க சேவையில் சீர்திருத்த முயற்சி

கொழும்பு, புதன்

சம்பளக் கமிஷனின் சிபார்சுக்கிணங்க அரசாங்க சேவையில் சீர்திருத்தம் செய்யும் பொருட்டு மூன்று உயர்தர கமிட்டிகளை அரசாங்கம் நியமிக்கவிருக்கிறது.

அரசாங்க ஊழியர்களின் பதவிகளைப் பரிசீலனை செய்வதும், பூரண மாறுதல் செய்வது ஆகியனபற்றி ஒருகமிட்டி ஆராயும். மற்றொரு கமிட்டி அரசாங்க ஊழியரின் தற்போதைய அலவன்ஸ்பற்றியும், மூன்ருவது கமிட்டி அரசாங்க ஊழியருக்கான தனிப்பட்ட அலவன்ஸ்பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கும்.

## அணுஆயுத தடை

### வல்லரசுகள் சம்பாஷணை

ஜெனீவா, மார்ச் 21

ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், ஆகிய மூன்று வல்லரசுகள் உபகமிட்டி அணுஆயுதத் தடைபற்றிய பேச்சுக்களை இன்று மீண்டும் ஆரம்பித்தன.

—

அல்ஜீயர்ஸ், மார்ச் 21

அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சுத் துருப்புக்கள் வெள்ளிக்கிழமைக்கு முன் வெளியேறிவிட வேண்டும் என ஓ ஏ ரிஸ். பயங்கரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# நகருடன் இணைய விரும்பவில்லை

## நல்லூர்கிராமசபை முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நகருடன் கொக்குவில், நல்லூர் கிராம சபைகளுக்குட்பட்ட எல்லைப் பகுதிகளையும் இணைப்பதற்கு அக்கிராமசபைகளின் விருப்பத்தை. உதவி ஸ்தல ஸ்தாபன அதிபர் கோரியிருந்தார்.

ஆனல் அவ்வாறு யாழ்ப்பாண நகருடன் இணைவதை தாம் விரும்பவில்லையென நல்லூர் கிராமசபை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## டச்சு-இந்தோனேஷிய ரகசிய சம்பாஷணை

வாஷிங்டன், மார்ச் 21

மேற்கு இரியான் சம்பந்தமாக ஒரு சமாதான தீர்வு காண்பதுபற்றி டச்சு, இந்தோனேஷியப் பிரதிநிதிகளுக்கிடையே இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் முன்பு அமெரிக்க ஸ்தானிகராயிருந்த திரு. எல்ஸ்வர்த் பங்கர் இப்பேச்சுக்களில் மத்தியஸ்தராக இருக்கிறார்.

## எம். பி. க்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரையைப் பாராட்டுமுகமாக சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் முத்தமிழ் விழா ஒன்று நடைபெறவிருப்புதாயும், இவ்வைபவத்தில் திரு. இராஜதுரையின் பேச்சுக்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

—

## வானவெளி ஒப்பந்தம்பற்றி திரு. ஜா

நியுயோர்க். மார்ச் 21

வெளிவான மண்டலத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ராணுவ காரணங்களுக்குப் பயன்படுத்துவதை தடுக்கும் ஒப்பந்தத் ஒன்றில் வல்லரசுகள் உடனடியாகக் கைச்சாத்திட வேண்டுமென ஐ. நா. விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. ஜா வற்புறுத்தினர்.

## பலாலியிலிருந்து இரத்தினங்களை கடத்த முயன்ற வியாபாரி

### ரூ. 36,000 அபராதம்

மாவிட்டபுரம், புதன்

கொழும்பைச் சேர்ந்த முஸ்லிம் நகை வியாபாரியொருவர் பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சி செல்லும் பொழுது சுங்க அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அவரை சப் கலக்டர் திரு. குமாரகுலசிங்கம் பரிசோதித்த போது, அவர் சட்ட விரோதமாக பன்னிரண்டாயிரம் ரூபா பெறுமதியான நீல நிறமுள்ள இரத்தினக் கற்கள் வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

வடபகுதி சுங்க இலாகா அதிபர் திரு. கே. திருநாவுக்கரசு இதுபற்றி விசாரணை நடத்தியபின் நகை வியாபாரிக்கு ரூபா 36,000 அபராதம் விதித்தார்.

## அல்ஜீரியாவில் பொதுத் தேர்தல்

### ஜூலையில் நடக்கும்

பாரிஸ், மார்ச் 21

சுதந்திர அல்ஜீரியாவில் வருகிற ஜூலை மாதக் கடைசியில் வாக்குக்கணிப்பு நடைபெறுமென்றும்வயதுவந்தஅனைவரும் வாக்களிப்பில் கலந்துகொள்வர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விடுவிக்கப்பட்ட அல்ஜீரிய தலைவர்கள் இன்று ரபாட் செல்வார்களென்றும் மொராக்கோ மன்னர் அவர்களை வரவேற்பார் என்றும்மேலும் அறிவிக்கப்பட்டது.

# ஒன்றரை லட்சம் பேர் தொழில் கந்தோரில் பதிவு

கொழும்பு, புதன்

கடந்த ஆண்டு இறுதிவரை, உத்தியோகம் தேடுமுகமாகத் தொழில் கந்தோர்களில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் தொகை 150,231 எனத் தொழில் இலாகா சமீபத்தில் வெளியிட்ட புள்ளிவிபரப் பட்டியல் ஒன்றினல் அறியக்கிடக்கிறது.

தொழில் கோரித் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களில் 444 பேர்களுக்கு இம்மாதம் உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளது. தொழில் கந்தோர்கள், இந்த வருடத்தில் இன்னும் பெருந்தொகையானவர்களுக்குத் தொழில் தேடிக் கொடுக்கும் எனதொழில் இலாகாஎதிர்பார்க்கிறது. தொழில் இலாகாக்களில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டவர்களுக்கு தொழில் வழங்குவதில் முதலிடம் அளிக்கவேண்டும் என அரசாங்கம் செய்து கொண்ட தீர்மானத்தையொட்டி இலாகா இவ்வாறு எதிர் பார்க்கிறது.

கடந்த ஆண்டு இறுதியில் பெயர்களைப் பதிவுசெய்து கொண்ட 150,231 பேர்களில் 26,595 தொழில்நுட்பத்துறையையும் விகிதர்கள் துறையையும்சேர்ந்தவர்கள்.

கடந்த டிசம்பரில் மட்டும், கொழும்புத் தொழில் கந்தோரில் 62,515 பேர்கள் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டார்கள். நீர்கொழும்புக் கந்தோரில் 14,821 பேர் பதிவுசெய்து கொண்டார்கள். காலித் தொழிற் கந்தோரில் 13,414 பேர் பதிவுசெய்து கொண்டார்கள்.

## வரட்சியினல் நோய்கள்

உடுப்பிட்டி, புதன்

கடும் வரட்சி காரணமாகக் கரவெட்டிப் பகுதியில் சின்னமுத்து, குக்கல் ஆகிய நோய்கள் குழந்தைசளைப் பீடித்துள்ளன. அநேகமாக இவ்வாரத்திற்குள் மழை பெய்யாது விடின் நிலைமை மோசமாகலாமென அஞ்சப்படுகிறது.

இதன் காரணமாக அத்துனும்மன் கோயிலில் விசேஷ அபிசேஷங்கள் நடைபெறுகின்றன.

## நன்றி நவிலல்

இ. வீரசிங்கம்: அண்மையில் நிகழ்ந்த எமது பேரிழப்பில் பல வழிகளிலும் உறுதுணையாகவிருந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், அந்திமக் கிரியையின்போது நேரில் சமுகமளித்தும் எமது துக்க சாகரத்தில் பங்குகொண்ட எல்லா நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
திருமதி பராசக்தி வீரசிங்கம், யோகவதி, அரசரத்தினம், சுந்தரலிங்கம் தம்பதிகள், சுந்தரவதனன், குமாரவேலு தம்பதிகள், எஸ்.ஆர்.கந்தையா, முகாந்திரம் தளையசிங்கம்.

சாவகச்சேரி,
21-3-62.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் சீரழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இலவம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## உங்கள் தினப்பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவஆண்டு பங்குனிமாதம் 9ந்-தேதி. வயாழக்கிழமை. (22-3-62) பகல் 3-31வரை பிரதமை. பின் துதியை. இரவு 9-49 வரை அத்தம். பின் சித்திரை. சித்தயோகம். பிரயாணம் செய்யவும், பெரியோரை, சகாக்களை சந்திக்கவும், சுப கருமங்களுக்கும் நலம். விவாகஞ்செய்ய, வீடுகட்ட, குடிபுக சுபதினமாகும்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான ரோகங்கள், கடன் பயம், நம்பி ஏமாற்றமடைதல் வருடமுற்பகுதியிலும், பின்னர் பொருள்வரவு, வண்டி வாகன லாபம், வித்தை லாபம், உத்தியோகச் சிறப்பு, சுயமான தொழில், வர்த்தக மேன்மை, குடும்பசுபிட்சம், பெண்களுக்கு களத்திரச் சிறப்பு, தனதானிய லாபம், மதிப்பு ஆதியனவும் காணப்படுகின்றன. முற்பகுதியில் தெய்வ வழிபாகளியற்றவும். நம்ப நடக்கவும்.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: தொழிற் சிறப்பு, மனத்துணிவு.

பரணி: இன்பசிந்தனை, குடும்ப நலக்கேடு.

கார்த்திகை: தொழில் வெற்றி, பணவரவு.

ரோகிணி: உறவினர்கஷடம், எதிர்ப்பு.

மிருகசீரிடம்: பெரியோர் நட்பு, பூமிசிந்தனை.

திருவாதிரை: சுபசெய்தி, பணவரவு.

புனர்பூசம்: பெண்பகை, அலைச்சல்.

பூசம்: செல்வாக்குயர்வு, பணவரவு.

ஆயிலியம், முதியோர்பகை, வெறுப்பு.

மகம்: பிதாவழிஉதவி, பதவி உயர்ச்சி.

பூரம்: குடும்பநலக்கேடு, செலவு.

உத்தரம்: நல்லோர் நட்பு, வித்தைச் சிறப்பு.

அத்தம்: பணமுடை, எதிர்ப்பு.

சித்திரை: நல்லோர் நேசம், தேகநலக்குறைவு.

சுவாதி: குடும்பசுகம், பணவரவு.

விசாகம்: ஊழியரால் கஷ்டம், கவலை.

அனுஷம்: தொழிற் சிறப்பு, வாக்குவன்மை.

கேட்டை: பொருள் அழிவு, தெய்வவழிபாடு.

மூலம்: பணியாளர் ஆதரவு, வியாபாரநன்மை.

பூராடம்: நீசர்தொடர்பு, பிதுருவழி சிந்தனை.

உத்தராடம்: கலையப்பியாசம், தொழிற் சிறப்பு.

திருவோணம்: பணமுடை, எதிர்ப்பு.

அவிட்டம்: மாதாவழிஉதவி, தேகநலக்குறைவு.

சதயம்: முயற்சி வெற்றி, நற்பேறு.

பூரட்டாதி: குடும்ப சச்சரவு, இன்பசிந்தனை.

உத்தரட்டாதி: சுபசெய்தி மாதாவழிச் சிந்தனை.

ரேவதி: பணமுடை, பகை.

பெல்கிரேட், மார்ச் 21

சொல்வேனியாவிலுள்ள நோவா கொரிகா என்னும் மலைப் பிரதேசத்திலிருந்து 6 மைல் நீளமுள்ள குழாய்மூலம் தொன்மின் என்னுமிடத்துக்கு 8,800 கலன் பால் ஒவ்வொரு நாளும் விநியோகிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கு மே. ஜெர்மன் கடன் உதவி

## தூதராலயம் விளக்கம்

கொழும்பு, புதன்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்துக்கு மேற்கு ஜெர்மன் ரூ. 40,000,000 கடனுதவி அளிப்பதாக சம்மதம் அளித்திருந்தது. இந்த கடன் உதவி இரு அரசாங்கங்களுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமேயன்றி அரசாங்கத்துக்கும் தனிப்பட்ட வங்கிக்குமிடையில் தொடர்பு கிடையாது என மேற்கு ஜெர்மன் தூதராலயம் சென்ற திங்கட்கிழமை ஒரு அறிக்கையில் வெளியிட்டிருந்தது

பார்லிமெண்டில் இது சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகள் தவருன கருத்துக்களைப் பரப்புவதாகவிருக்கிறது. இதனல் தான் தூதராலயம் சரியான தகவலை வெளியிடத் தீர்மானித்தது என தூதராலய உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு அளிக்கப்படவிருக்கும் கடனுதவி, மேற்கு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு அரசாங்கத்தினலேயே அளிக்கப்படுகிறதே யன்றி வேறு எந்த தனிப்பட்ட ஸ்தாபனத்தினலும் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்கு ஜெர்மன் தூதராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் எந்தவித சொந்த நலனையும் கருதாமலே இலங்கைக்கு ஜெர்மன் அரசாங்கம் கடனுதவி செய்கிறது எனத் தெரிவித்துள்ளது.

## சென்னையில் புஷ்பக் கண்காட்சி

### கவர்னர் ஸ்ரீ மேதி துவக்கிவைத்தார்

சென்னை, மார்ச் 21

பீப்பிள்ஸ் பார்க மை லேடி கார்டனில் 39 வது வருடாந்தர புஷ்பக் கண்காட்சியை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி துவக்கிவைத்தார்.

மாணவர்களால் சிறந்த முறையில் பள்ளித் தோட்டங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்ட பல் வேறு கார்ப்பரேஷன் பள்ளிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினர்.

ஆரம்பத்தில் கவர்னரை வரவேற்று மேயர் ஸ்ரீ ஜி. குசேலர் பேசுகையில் புஷ்பத் தோட்டங்களையும், பூங்காக்களையும் பேணிக் காக்க ரூ 4 லட்சம் செலவிடப்படுவதாகக் கூறினர்.

கார்ப்பரேஷன் கமிஷனர் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் நன்றி கூறினர்.

## தேசியக்கல்வி எல்லோருக்கும பொது

-திரு. கருணரத்தின

கட்டுநாயகா, புதன்

தேசியகல்வித் திட்டம் சிங்களவருக்கும் பௌத்தசமயத்தவருக்கும்மட்டுமே நன்மை செய்யும் என சிலர் கூறுகிறுர்கள். ஆனல் இது உண்மையல்ல மதஇனபேதமின்றிசகலருக்கும் கல்வி வசதியளிக்கவே இத்திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது, என கல்வி மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்ன முக்கலங்கமுவா சீதுவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

திரு. கருணரத்தின மேலும் பேசுகையில் தேசியகல்வித் திட்டம் பற்றி மக்கள் பேசிக் கொண்டாலும் அப்படி ஒரு கல்வித்திட்டம் இன்னும் நாட்டில் நிலைக்கவில்லை என்ருர்.





நாளுக்கு
நாள்
கடின பாவனைக்கு
நிகரற்று
விளங்குவது.

கனபோ
பொப்லின்

[illegible], நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்லின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவிநியோகஸ்தர்கள: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் [illegible]
மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெள்[illegible]

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/11

# இந்திய—சீன எல்லைப் பிரச்னை — மத்தியஸ்த தீர்ப்பு யோசனையை நேரு நிராகரித்தார்

## "சீனஇல்லாமல் பொதுவான படை குறைப்பு சரிவராது"

புதுடில்லி, மார்ச் 21

**இந்திய-சீன எல்லைப் பிரச்சினையை மத்தியஸ்தத்துக்குவிடும் நோக்கமோ எண்ணமோ தமக்கு இல்லையென்று பிரதமர் நேரு இன்று அறிவித்தார். ஜெனிவாவில் நடைபெறும் படைகுறைப்பு மகாநாட்டில் ஒரு உடன்பாடுஏற்படுவதற்கு தமது சமுகம் அவசியமாகக் காணப்பட்டால் ஏப்ரல் மாதத்துக்குப்பின்னர் ஜெனிவாவுக்குத்தாம் செல்வதற்குத் தயாராக இருப்பதாகவும் திரு. நேரு தெரிவித்தார்.**

பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் நேரு இன்று பேசினர்.

இந்திய-சீன எல்லைப் பிரச்சினையை மத்தியஸ்த தீர்ப்புக்கு விடவேண்டுமென்று சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சமீபத்தில் தெரிவித்த யோசனைபற்றிக் கேட்டபொழுதே பிரதமர் நேரு தமக்கு அந்த நோக்கமோ எண்ணமோ இல்லை என்று கூறினர்.

"என்றாலும் மத்தியஸ்த தீர்ப்புக்கு விடும் கொள்கையை ஒதுக்கிவிடமுடியாது" என்று பிரதமர் நேரு கூறினர்.

"இந்த மாதிரியான பிரச்னைகளுக்கு மத்தியஸதமூலம் தீர்ப்புகாண்பது சுலபமல்ல. பிரச்னைகளின் அம்சங்களையும்,அவைகளுக்குகந்த சூழ்நிலைகளையும், மததியஸதம் செய்வதற்குத் தகுதிவாய்ந்த பொருத்தமான மத்தியஸ்தரையும் கண்டு பிடிப்பதில் இவை தங்கியுள்ளது" என்று திரு. நேரு குறிப்பிட்டார்.

சீனப்பிரதமர்சூ-என்-லாயை சந்தித்துப் பேசக்கூடிய சந்தர்ப்பம் எதுவும் தற்சமயம் இல்லையென்றும் திபேத் சம்பந்தமாக பழைய ஒப்பந்தமே கௌரவிக்கப்படாமலிருக்கும் போது புதிதாக ஒப்பந்தம் செய்துகொள்வதால் பயன் ஏற்பட மாட்டாதென்றும் பிரதமர் நேரு கூறினர்.

பேச்சு வார்த்தை நடத்த நாம் தயாராகவே இருக்கிறோம். எமது நிலையில் நாம் உறுதியாக இருக்கிறோம். வலிமையுடனிருக்கவும் வேண்டும். நம்மைப் பலவீனப்படுத்தும் எதையும் நாம் செய்யக் கூடாது" என்று திரு. நேரு கூறினர்.

### ஜெனிவா மகாநாட்டு முயற்சி

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாடு பற்றிப் பிரதமர் நேரு குறிப்பிடுகையில் கூறியதாவது:-

படைகுறைப்பு மகாநாட்டில் முன்னேற்றம் தென்படவில்லை. ஆனல் அங்கு நடைபெறும் முயற்சியை பாராட்ட வேண்டும். மக்கள் அந்த மகாநாட்டின் முடிவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

அந்த மகாநாட்டில் ஒரு உடன்பாடு ஏற்படுவதற்கு எனது சமுகம் உதவி புரியுமென நம்பினல், நான் அங்குபோக வேண்டியது அவசியமாஞல் ஏப்ரல் மாதத்துக்குப்பின்னர் அங்கு செல்வேன்.

### சினஇல்லாமல் சரிவராது

சீன போன்ற பெரிய ஒரு அரசு கலந்து கொள்ளாமல் பொதுப் படை குறைப்பு ஏற்பட முடியாது என்பது உண்மை என்று பிரதமர் நேரு ஒப்புக்கொண்டார்.

படை குறைப்பு மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அதைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளெதையும் வல்லரசுகள் செய்யக் கூடாதென்றும் மகாநாடு முடிவடையும் வரையாகுதல் அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் திரு. நேரு தெரிவித்தார்.

## அணுஆயுத சோதனைகளை கண்டுபிடிக்கும் நிலையங்கள்

### நடுநிலைமை நாடுகளிடம் இருக்க மேனன் யோசனை

ஜெனிவா, மார்ச் 21

அணு ஆயுத சோதனைகள் நடைபெறுவதைக் கண்டுபிடிப்பதற்கு வல்லரசுகளிடம்உள்ள கண்டிபிடிப்பு நிலையங்கள் இருப்பதுபோல் வல்லரசு மண்டலங்களைச் சேராத நடுநிலைமை நாடுகளிடமும் அணு ஆயுத சோதனைக் கண்டுபிடிப்பு நிலையங்கள் இருக்கவேண்டும் என்று இந்திய பாதுகாப்பு மந்திரி. திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நேற்று படைகுறைப்பு மகாநாட்டில் யோசனை தெரிவித்தார்.

படைகுறைப்பும் கட்டுப்பாடும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத விஷயங்கள் என்று திரு. மேனன் கூறினர்.

இங்குநடைபெற்றுவரும் 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாடு நேற்றுப் பிற்பகல் சாதாரண முறையில் நடைபெற்றபோது அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்த வாய்ப்புக்கள்பற்றி மூவல்லரசுகளைக்கொண்ட துணைக்கமிட்டி விவாதிக்கவேண்டுமென்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தவாய்ப்புப்பற்றி ஜெனிவாமகாநாட்டின் துணைக் கமிட்டியொன்றில் மீண்டும் விவாதிக்கப்படவேண்டுமென்று பிரிட்டனும் அமெரிக்காவும்தெரிவித்த யோசனையை சோவியத் யூனியன் ஏற்றுக் கொண்டுள்ளது.

17 நாடுகளின் மகாநாடு இன்று காலையில் மீண்டும் நடைபெறும்பொழுது அணு ஆயுத சோதனைத்தடை பற்றி ஆராய்வதற்கென மூவல்லரசுகளைக்கொண்ட ஒரு துணைக் கமிட்டி இன்று முறைப்படி நியமிக்கப்படும்.

## ஆர்ஜன்டைனவில் கூட்டு அரசாங்கம்

### ஜனதிபதி முயற்சி

புவனஸ்ஏயர்ஸ், மார்ச் 21

ஆர்ஜன்டைனவில் கூட்டு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு ஜனதிபதி பிரன்டீஸி பெரும் முயற்சிசெய்துவருகிறார்.

ஆர்ஜன்டைனவிலிருந்து 7 வருடங்களுக்குமுன் இராணுவத்தினரால் நாடுகடத்தப்பட்ட முன்னள் பிரதமர் டாக்டர் பெரனின் ஆதரவாளர்கள் இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெருமளவில் வெற்றிபெற்றதால் ஆர்ஜன்டைனவில் மீண்டும் ராணுவ ஆட்சியே ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்கு ஜனதிபதி பிரண்டீஸி நடவடிக்கை எடுத்துள்ளார்.

டாக்டர் பெரனின் ஆதரவாளர்கள் பெரும்அளவில் வெற்றியீட்டிய ஐந்து மாகாணங்களைப் பொறுப்பேற்றுள்ள இராணுவத்தினர் ஜனதிபதிக்கு ஒரு நிபந்தனை விதித்துள்ளனர்.

"கலப்பு அரசாங்கத்தில் இராணுவ அதிகாரிக்கும் இடம் அளிப்பதானல் கலப்பு அரசாங்கம் அமைக்க அனுமதியளிக்கப்படும். இல்லையேல் பதவியிலிருந்து நீக்குவோம்" என்று ஜனதிபதி பிரண்டீஸியை இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

## அல்ஜீரியாவில் 77 பேர் பலி; 100 பேர் காயம்

அல்ஜியர்ஸ், மார்ச் 21

அல்ஜீரியாவில் சண்டைநிறுத்தம் அமுலுக்குவந்துள்ள இச்சமயத்தில் அல்ஜீரிய விடுதலையை எதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய இரகசியஸ்தாபனத்தினர் தங்கள் பலாத்காரச் செயல்களைத் தீவிர்ப்படுத்தியுள்ளனர். நேற்று அல்ஜீரியர்ஸிலும் ஓரானிலும் நடைபெற்ற பலத்கார சம்பவங்களில் 77 போர்கொல்லப்பட்டனர். நுறுபோருக்கு மேல் காயமடைந்தனர்.

ஐரோப்பிய தீவிரவாதிகளையும் தேசீகவாதிகளையும் எதிர்த்துச் சமாளிக்கவேண்டிய நிர்ப்பந்தம் பிரஞ்சுத்துருப்புக்களுக்கு நேற்று ஏற்பட்டது.

## தேசியத் திட்டங்கள் பற்றிய விபரம்

ராவல்பிண்டி, மார்ச் 21

நாட்டின் தேசியத்திட்டங்கள்பற்றி தேசியதினமான இம்மாதம் 23-ம் திகதி நாட்டுமக்களுக்கு விளக்கம் தெரிவிக்கும் ஒரு அறிக்கையை வெளியிட இருப்பதாக பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் இன்று தெரிவித்தார்.

## அந்நிய அரசு காரணமாம்!

ராவல்பிண்டி, மார்ச் 20

முன்னள் பிரதமர்களில் ஒருவரான எச். எச். சுஹ்ராவர்த்தி கைதுசெய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சென்றமாதத்தில் டாக்காவில் நடைபெற்ற கிளர்ச்சிகளுக்கு அன்னிய அரசுவின் தூண்டுதல் தான் காரணமெனறு தகவல், தேசிய புனரமைப்பு அமைச்சின் காரியதரிசி ஜனப் ஹஷிம் ரசா தெரிவித்தார்.

## அமரிக்க தூதர் விருந்து

புதுடில்லி, மார்ச் 21

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இன்று பாகிஸ்தானுக்குச் செல்லும் அமெரிக்க ஜனதிபதியின் மனைவியார் திருமதி ஜாக்குலேன் கென்னடிக்கு இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. கல்பிரெய்த் நேற்றிரவு ஒரு விருந்துபசாரயளித்தார். இவ்வைபவத்தில் இந்திய இசைக்கலைஞர்கள் இசை விருந்தளித்தனர்.

## காஷ்மீர் பிரச்னை — பாதுகாப்புசபை விவாதமா? நேரடிப்பேச்சா?

### இரண்டில் ஒருவழிதான் பொருத்தம் என்கிருர் நேரு

புதுடில்லி, மார்ச் 21

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக பாகிஸ்தானுடன் இந்தியா நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதம் நடைபெறுவதும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விஷயங்கள் என்று இந்தியப் பிரதமர் திரு. நேரு லோக சபையில் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இரண்டு நாடுகளும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் அல்லது பாதுகாப்புச் சபையில் விவாதிக்க வேண்டும். இவற்றில் ஒரு வழியைத் தான் பின்பற்றவேண்டுமேயொழிய இரண்டையும் பின்பற்றுவது பொருத்தமற்றது என்று பிரதமர் நேரு கூறினர்.

1960-ம் ஆண்டில் தான் பாகிஸ்தானுக்குச் சென்றிருந்தபொழுது ஜனதிபதி அயூப்கானுக்கு நேரில் அழைப்பு விடுத்ததாகவும் அச்சமயம் அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டதுபோல் தோன்றியதாகவும் பிரதமர் நேரு தெரிவித்தார்.

## ருத்தல் உப்பு 30 சதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப்பகுதியில் இப்பொழுது உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதோடுவிலையும் அதிகரித்திருப்பது பொது மக்களுக்கு பெரிதும்கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

ருத்தல் 5 சதம் வரையில் விற்பனையானஉப்பு இப்போது 30 சதத்துக்குமேல் விற்பனை செய்யப்படுவதாகத் தொரிகிறது.

## பரீட்சைக்குத் தோற்றியவர் சம்பள உயர்வு பெறுவர்

சிங்கள மொழித் தகுதிக் குறைவு காரணமாகச் சில உத்தியோகஸ்தர்களது சம்பள உயர்வு ரத்துச் செய்யப்படவிருந்தது. இந்த உத்தியோகஸ்தர்களில் சிலர் சிங்கள தகுதிப் பரீட்சை முடிவைக் காத்திருப்பவர்கள்.

இவ்வாண்டு பெப்ரவரி 17-ல் நடைபெற்ற சிங்கள தகுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகும்வரை தகுதிப் பரீட்சைக்குத் தோற்றிப் பரீட்சை முடிவுகளைக் காத்திருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குப் பரீட்சை முடிவுகள் வெளியாகும்வரை தடையின்றிச் சம்பள உயர்வுகளை வழங்கும்படி நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திறைசேரிக்கு அறிவித்துள்ளார்.

## வரலாற்றுக், குறிப்பும் ஆசிரியர் சம்பளமும்

உடுப்பிட்டி, புதன்

ஒவவொரு பாடசாலையிலுமுள்ள வகுப்பாசிரியர் தங்கள் வகுப்பிலுள்ள மாணவர் பற்றிய சகல விபரங்களையும் வரலாற்றுக் குறிப்பு அட்டவணைகளில் நிரப்பவேண்டியது அவசியமென்றும், அக்கடமையில் அலட்சியமாக இருந்தால் சிலவேளைகளில் ஆசிரியரின் உயர்வும் சம்பளமும் பாதிக்கப்படுமென்றும் வித்தியாதிபதியின் சுற்றறிக்கையொன்று கூறுகிறது.

இவ்விஷயத்தில் வகுப்பாசிரியர் ஆலோசக ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெறலாமென்றும் கூறப்பட்டுள்ளது.

திருமணக்கோலங்களிலும் திருவிழாக்காலங்களிலும் தகுந்த சேலைகளுக்கு

"ஹான்ட்லூம்ஸ்"

தயாரிப்புகள் உங்களுக்கோர் வரப்பிரசாதம்

தலைமை ஸ்தாபனம்: 7, செட்டியார் தெரு, கொழும்பு. 47, மெயின் வீதி, [illegible] (பறங்கித் தெரு) யாழ்ப்பாணம். கிளை ஸ்தாபனம்: 69, கொழும்புத் தெரு, கண்டி.

WA/HMS 2

### மணி வாக்கு

'கடமையை நிறைவேற்றுவதற்கு அன்பு, துணிவு ஆகிய இரு வழிகாட்டிகள் உள. இரண்டும் ஒன்று கூடிவிட்டால் ஒருநாளும் வழிதவற மாட்டாது.'

ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 9 உ (22-3-62)

## உப்புத் தட்டுப்பாடு

இலங்கையில் இப்போது சில ஆண்டுகளாக உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுவருகின்றது. உப்பளங்கள் நிறைந்த ஒரு நாட்டில் உப்புத் தட்டுப்பாடு ஏற்படுவதும், வெளிநாடுகளிலிருந்து உப்பை இறக்குமதி செய்வதும் விரும்பத்தக்கதல்ல. ஆனையிறவு, புத்தளம், பாலாவி, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றைவிட இலங்கையிலுள்ள வேறு சில பகுதிகளிலும் உப்பளங்களை அமைக்க வேண்டுமெனவும் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்பைவிட தனிப்பட்டவர்களிடமிருந்தும் அரசினர் உப்பை வாங்குகின்றனர்.

அம்பாந்தோட்டையில் ஆறுயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள உப்பளங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு நான்கு அல்லதுஐந்து லட்சம்தொன் உப்பு உற்பத்தி செய்யலாமென்றும், இதில் ஒரு பகுதியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்கென ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமெனவும் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. இப்படி உப்பை ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட இந்நாட்டில் இப்போது உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது வியப்பையே தருகின்றது.

முன்னர் எல்லாம் ஒரு ருத்தல் உப்பு ஆறு சதத்துக்குக் கிடைத்துவந்தது. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பகுதியில் முப்பது சதம் கொடுத்து ஒரு ருத்தல் உப்பை மிகுந்த சிரமத்தின்பேரில் மக்கள் வாங்கிவந்தனர். இப்போது கடைகளில் உப்புக் கிடைப்பதே அரிதாகிவிட்டது.

1959-ம் ஆண்டிலும் நாடெங்கணும் உப்புத் தட்டுப்பாடு இருந்துவந்தது. ஆனால் அன்று நிலைமை இவ்வளவு மோசமடையவில்லை. 1957-ம் ஆண்டில் பெருவெள்ளம் வந்து உப்பளங்களைச் சேதப்படுத்திய காரணத்தால் உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டதென அரசாங்கம் அப்போது காரணங் காட்டியது.

உப்பு உற்பத்தியில் நிலவிய தாகக் கருதப்பட்ட ஊழல்கள் தட்டுப்பாட்டுக்குக் காரணமாகவிருக்கலாமென்ற பேச்சுக்களும் சென்ற வருடம் பார்லிமெண்டில் அடிபட்டன. 1959-ம் ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் முயற்சி செய்து பல இடங்களில் உற்பத்தியைப் பெருக்கியது. அப்படியிருந்தும் உப்புக்கு வெளிநாடுகளை எதிர்பார்க்கவேண்டிய நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுக்கொண்டே வருகின்றது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் உப்பளங்களை வளமாக்கி உற்பத்தியைப் பெருக்குவதும் ஒன்றாகும். இந்த நோக்கத்துடன் 1957-ம் ஆண்டில் தேசிய உப்பு கார்ப்பரேஷன் நிறுவப்பட்டது. கார்ப்பரேஷனின் புதிய திட்டத்தின் பிரகாரம் அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளத்தில் அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அப்படியிருந்தும் நிலைமை சீரடையவில்லை.

நாட்டுக்குத் தேவையான உப்பை உற்பத்தி செய்வதற்குப் போதிய வசதிகளும் இயற்கை வளமும் இருந்தபோதிலும் 'உப்பில்லையே' என்று மக்கள் தவிக்கின்றனர் இந்த நிலை ஏற்படாதிருப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வது அவசரமும் அவசியமுமாகும்.

---

பாகிஸ்தான் புதிய அரசியல் திட்டம்: (2)

# தேசிய சட்ட சபையின் அதிகாரம்

## ஜனாதிபதியின் உரிமைகள்

— வ. மகாதேவன் —

புதிய அரசியல்திட்டம் உபஜனாதிபதி பதவிக்கு இடமளிக்கவில்லை. தேவையான நேரங்களில் தேசிய சட்டசபையின் சபாநாயகரே ஜனாதிபதிக்குப் பதிலாகக் கடமையாற்றுவார் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அவருக்குப் பொறுப்பாக இருக்கும் ஒரு மந்திரிசபை அமைக்கப்படும் மந்திரிசபை உறுப்பினர்கள் தேசியசட்டசபை அங்கத்தவர்களாக இருக்கமுடியாது. சட்டசபை உறுப்பினர் எவரும் மந்திரியாக நியமிக்கப்பட்டால் சட்டசபை அங்கத்துவ பதவியை ராஜினாமாச்செய்யவேண்டும்.

மந்திரிகளும் சட்டத்துறை நாயகமும் (அட்டோர்னி-ஜெனரல்) தேசிய சட்டசபை நடவடிக்கைகளில் கலந்து உரை நிகழ்த்தலாம். ஆனால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கமாட்டாது.

மந்திரிகளுக்கு உதவியாக நியமிக்கப்படும் பார்லிமெண்ட் காரியதரிசிகள் தேசிய சட்டசபை உறுப்பினராக இருக்கலாம்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஜனாதிபதியின் மந்திரிசபையைப்போல் பாகிஸ்தானின் மந்திரிசபையும் அமைக்கப்படவிருக்கிறது.

கானா குடியரசில் உள்ளதைப்போல் பாகிஸ்தானிலும் உபஜனாதிபதி, பிரதமமந்திரி ஆகிய பதவிகள் இருக்கமாட்டா.

### தேசிய சட்டசபை

மக்கள் தேர்தல் கழகத்தினால் நேர்முகமுறையில் தெரிவு செய்யும் 150 உறுப்பினர்கள் தேசிய சட்டசபையில் இருப்பார்கள். மேற்குப்பாகிஸ்தான் மாகாணசட்டசபையும்கிழக்குப் பாகிஸ்தான் மாகாணசட்டசபையும் மூன்றுபேர் வீதம் ஆறு பெண் உறுப்பினர்களைத் தேசிய சட்டசபைக்குத் தெரிவு செய்யலாம். எனவே தேசிய சட்டசபையில் மொத்தம் 156 அங்கத்தவர்கள் இருப்பார்கள் பெண்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிற போதிலும் பெண் அபேட்சகர்கள் மற்ற ஸ்தானங்களில் எதற்கும் போட்டியிடும் உரிமை உடையவர்களாக இருப்பர்.

சட்டசபை ஒரு சபாநாயகரையும் இரு உப சபாநாயகர்களையும் தெரிவுசெய்யும் வருடமொன்றுக்குக் குறைந்தது இரு தவணைக்காலங்களுக்காவது சட்டசபைக் கூட்டங்கள் நடைபெறவேண்டும். இரு தவணைகளுக்கும் இடையிலுள்ள காலம் 180 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

தேசியசட்டசபையின் அனுமதியுடனேயே வரிகள் விதிக்கப்படவேண்டும். ஒரு முறை அங்கீகரிக்கப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தில், ஜனாதிபதியின் அனுமதியின்றி, தேசிய சட்டசபை ஒரு மாற்றங்களையும் செய்யமுடியாது.

பார்லிமெண்ட் நிறைவேற்றும் மசோதாவை ஜனாதிபதி அங்கீகரிக்க மறுத்தால் தேசிய சட்டசபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் ஒரு பிரேரணையை நிறைவேற்றி ஜனாதிபதியின் தீர்ப்பை நீக்கலாம். ஜனாதிபதிக்கும் பார்லிமெண்டுக்குமிடையே பிணக்கு ஏற்படும்போது தேர்தல் கழகத்தின் தீர்ப்புக்கு பிரச்சினையைச் சமர்ப்பிக்கும் உரிமையும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. (தேர்தல் கழகத்தில் சுமார் 80,000 உறுப்பினர்கள் இருப்பார்கள்.)

தேசிய சட்டசபையின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள். இவ்வாண்டு தெரியப்படவிருக்கும் முதலாவது தேசிய சட்டசபையினதும் மாகாணசட்டசபைகளினதும் பதவிக்காலம் மூன்று வருடங்களாக இருக்கும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது தேசிய சட்டசபை கூடும்போது இராணுவச்சட்டம் நீக்கப்படும். அரசியல் கட்சிகள்மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்படமாட்டாது என்றும் தேசிய சட்டசபைக்கு இந்தத்தடையை நீக்கும் அதிகாரம் இருக்கிறதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் முதலாவது சட்டசபைகளுக்கு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் சுயேச்சை அங்கத்தவர்களாவே இருப்பார்கள்.

### நீதிபரிபாலனம்

நாடுமுழுவதுக்கும் உயர்நீதிமன்றமும், மாகாணங்களுக்கு உயர்மன்றங்களும் உயர்ந்த நீதித்தாபனங்களாக இருக்கும். ஜனாதிபதியே பிரதம நீதிபதியை நியமிப்பார். ஜனாதிபதி பிரதமநீதிபதியைக் கலந்தாலோசித்தே ஏனைய நீதிபதிகளை நியமிப்பார். வருடமிருமுறை சுப்ரீம்கோர்ட் கிழக்குப் பாகிஸ்தானின் தலைநகரில் நடைபெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

### மாகாண அரசாங்கம்

ஜனாதிபதியால் நியமனஞ் செய்யப்படும் தேசாதிபதி மாகாண நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பார். மாகாண சட்டசபை உறுப்பினரல்லாதவர்களடங்கியமாகாண மந்திரிசபை தேசாதிபதியால் அமைக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மாகாண சட்டசபை இருக்கும். மக்களால் நேர்முக முறையில் தெரிவுசெய்யப்படும் 150 அங்கத்தவர்களும் ஐந்து பெண் அங்கத்தவர்களும் சேர்ந்து மொத்தம் 155 உறுப்பினர்கள் இச்சட்டசபைகள் ஒவ்வொன்றிலும் இருப்பார்கள்.

தேசிய சட்ட சபையைப் போல்மாகாண சட்டசபையும் ஒரு சபாநாயகரையும் இரு உபசபாநாயகர்களையும் தெரிவு செய்யும்.

மாகாண சட்டசபை நிறைவேற்றும் மசோதாவுக்கு தேசாதிபதி அங்கீகாரம் அளிக்க மறுக்கும்போது எழும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பிணக்குகள் தேசியசட்டசபையின் தீர்ப்புக்கு சமர்ப்பிக்கப்படும். தேசிய சட்டசபை தேசாதிபதிக்குச் சார்பாகத் தீர்ப்பளிக்குமானல் மாகாண சட்டசபை கலைக்கப்பட்டுவிடும்!

நெருக்கடி காலங்களில் சட்டங்களைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் தேசாதிபதிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிரகடனப் படுத்தப்படும் சட்டங்கள் பின்னர் சட்டசபைகளின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

### இஸ்லாமிய தத்துவசபை

சட்டவல்லுனர்களும், கல்வி நிபுணர்களும் அடங்கிய இஸ்லாமிய தத்துவசபை ஒன்று நிறுவப்படும். பின்பற்றப்படவேண்டிய கொள்கைகள் மீறப்படாமல் இருப்பதற்காக இச்சபை ஆலோசனைகள் கூறிவரும்.

### மொழிகள்

உருதுவும் வங்காளியும்பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக இருந்துவரும். 1972 வரை ஆங்கிலமும் உத்தியோகத்திலிருக்கும். 1972ல் ஜனாதிபதி ஒரு விசாரணைச் சபையை நியமித்து ஆங்கிலத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்வார்.

### தேர்தல் முறை

ஒவ்வொரு மாகாணமும் 40,000திற்குக்குறையாத தேர்தற் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 21 வயதுக்கு மேற்பட்டவர்களடங்கிய வாக்காளர் இடாப்புகள் தயாரிக்கப்படும். காலத்துக்குக் காலம் வாக்காளர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்களை தேர்தல் கழகத்திற்குத் தெரிவுசெய்வர். ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் பிரிவுகள் 150 தொகுதிகளாகச் சேர்க்கப்பட்டு மாகாணசட்டசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் பிரிவுகள் 75 தொகுதிகளாகச் சேர்க்கப்பட்டு தேசியசட்டசபை உறுப்பினாகள் தெரிவு செய்யப்படுவர்.

பிரதம தேர்தல்அதிகாரியும் மாகாண தேர்தல் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தலுக்கான ஆயத்த வேலைகளை இவர்கள் செய்யத்தொடங்கியிருக்கின்றனர். தேர்தலுக்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை. திகதி குறிக்கப்படுமா? தேர்தல்நடைபெறுமா? அல்லது அரசியல் திட்டம் கைவிடப்படுமா? இவ்வாண்டு முடிவடைவதற்குள் இவை எல்லாவற்றிற்கும் பதில் தெரிந்துவிடும்.

### சில சிறப்பான அம்சங்கள்

பாகிஸ்தான் அரசியல் திட்டத்திற்கு சில தனிப்பட்ட சிறப்பான அம்சங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில வருமாறு:-

1. அயலிலில்லாத இரண்டு தனிப்பட்ட மகாணங்கள் அடங்கிய ஒரு கூட்டாட்சி (சமஷ்டி) நாடு உலகிலே பாகிஸ்தான் ஒன்றுதான்.

2. சகல தேர்தல்களும்நேரல் முறையில் நடைபெறவேண்டுமென்று இந்த அரசியல் திட்டமொன்றில் தான் விதிக்கப்பட்டிருக்கிறது.

3. ஒரு மன்ற மத்திய சட்டசபையுள்ள கூட்டாட்சி நாட்டுக்கு பாகிஸ்தான்ஒன்றுதான் உதாரணமாகும்.

4. கட்சிகளைத் தடைசெய்து பத்திரிகைகளைத் தணிக்கை செய்து தேர்தல் நடத்த முயற்சிக்கும் நாடு பாகிஸ்தான் ஒன்றுதான்.

5. கட்சிப்பற்றற்ற சுயேச்சை அங்கத்தவர்களடங்கிய சட்டசபைகளை அமைத்து நாட்டை

(8-ம் பக்கம் பார்க்க)

---

### ஐயாறன் எழுதுவது

தேவாரம் பாடினல் மழை பெய்யுமா? இக்கேள்வியை இலங்கை வானெலி நிருபர் கேட்டதற்கு, "சில பண்களைப் பாடினல் பெய்யும்" என்று தருமை ஆதீன ஓதுவா மூர்த்தியான வித்துவான் சுவாமிநாதன் பதிலளித்தாராம். என்ன பண் என்ற விபரம் தெரியவில்லை.

சென்ற ஞாயிறன்று அவரும், திருஞான சம்பந்தனும் கொழும்பு விவேகானந்த சபையிலே சுமார் 3 மணி நேரம் தேவார இன்னிசை பாடிய போது, திடீரென மழை பலமாகப் பெய்தது. கொழும்பிலே பல வாரங்களாக மழையே கிடையாது. கோடை வெயில் கொளுத்துகிறது. அன்று தேவார இன்னிசைமாரி பொழிந்தபோதுஎதிர்பாராமல் வருணனும் வந்துவிட்டான். குறித்த பண்ணை அவர் பாடினரோ என்னவோ தெரியாது. மழையுடன் தேவார மாரியும் பொழிந்ததால், கேட்டோர் உள்ளம் மட்டுமின்றி உடலும் குளிர்ந்தது!

* * *

"மந்திரமாவது நீறு" என்ற பதிகத்தை புதிய ராகத்தில் துகக் கவர்ச்சியாகப் பாடிய போது, மூன்று முறை கரகோஷம் செய்தனர். வேறு சில தேவாரங்களையும் நவீன மெட்டுகளில் பாடியதை மக்கள் அதிகம் ரஸித்தனர்.

தேவார திருமுறைகளை இப்படி புதிய மெட்டுகளில் பாடுவது சரியா? பழைய பண் தவறி பாடப்படாதென்றார் ஒரு நண்பர். இது குறித்து கருத்து வேற்றுமைக்கு அதிக இடமுண்டு. தமிழ் நாட்டில் சில கோவில்களில் ஓதுவா மூர்த்திகள் தேவார திருமுறைகளை ஓதுகையில், அங்கு கேட்பதற்கு ஓர் ஆளும் இருப்பதில்லை. அது பண்டாரப் பாட்டு என்று அலட்சியம். இன்று பொதுமக்களில் பெரும்பாலோரும் கோவிலுக்குச் செல்லாமல், சினிமாச் சாலைகளுக்கே செல்லுவதைப் பார்க்கிறோம். பார்த்த படத்தையே பன்முறை பார்க்கிறார்கள். ஏன் என்று கேட்டதற்கு பாட்டுக்களைக் கேட்கத்தானென்றும், அப்பாட்டுகள் மிகக்கவர்ச்சியான மெட்டுகளில் இருப்பதாயும் நண்பரொருவர் சொல்லுகிறார்.

ஒரு முறை ராஜாஜி இது பற்றிப் பேசுகையில், நவீன மெட்டுகளில் பக்திப் பாடல்களைப் பாடவேண்டுமென்றும் அப்போதுதான் மக்கள் மனதைக் கவர்ந்து அவர்களைத் தெய்வீக வழியில் திருப்பலாமென்றும் சொன்னர்.

எந்த ராகத்தில் எப்படிப் பாடுவதென்பது அவ்வளவு முக்கியமல்லவென்றும் பக்தியுடனே பாடுவதே முக்கியமென்றும் சொல்லுகிறார் மற்றோர் அன்பர். கோவில் பூசையிலே திருமுறை ஓதுகையில், பண்ணுடன் பழைய முறைப்படி பாடலாமென்றும், தேவார திருமுறை கச்சேரிகளில், செவிகளுக்கு இன்பமாக, கவர்ச்சியாக நவீன மெட்டுகளில் பாடலாமென்றும் அவர் தெரிவித்தார்.

இது எப்படியாயினும், தருமை ஆதீனத்தைச் சேர்ந்த ஓதுவாமூர்த்திகளே புதிய முறையில பாடி, மக்களது பாராட்டுக்களைப் பெறுவது குறிப்பிடத் தக்கது. மூன்றுவார காலம் இலங்கையில் தங்கி இருக்கையில், பல இடங்களில் தேவாரக் கச்சேரி நடத்தியதுடன், சைவ மங்கையர் கழக மண்டபத்தில் தேவார வகுப்பும்நடத்தி பல மாணவ மாணவிகளுக்குக் கற்பித்தார்.

திருக்கேதீச்சர தேவஸ்தானத்தாரின் நன்முயற்சியால், இவர்கள் வந்ததால் இங்கு வாடியிருந்த சைவப் பயிரும்,

(8-ம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜெர்மனியில் கல்வி சீர்திருத்தம்

பிராங்க்-பர்ட் (டாட்) மார்ச் படிப்பை முடித்து வேலை தேடும் ஜெர்மானியர்கள் கல்வித்தரம் குறைந்துள்ளது என்ற புகார்கள் ஏற்பட்டதின் பேரில் ஜெர்மன் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி முறையில் என்ன சீர்திருத்தங்கள் செய்யலாம் என்பது குறித்து மேற்கு ஜெர்மெனியில் கவனம் செலுத்தப்படுகின்றது.

படிபபு வருஷங்களை 8 வருஷ காலத்திலிருந்து 9 அல்லது 10 வருஷகாலமாக அதிகரிப்பது பற்றியும், போதனை முறைகளில் புது முறைகளைப் புகுத்துவது பற்றியும் வகுப்பிலுள்ள மாணவ மாணவிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

1949-ல் நிதித்துறையில் சீர்திருத்தம் ஏற்பட்டது முதல் மேற்கு ஜெர்மனியில் புது பள்ளிக் கூடங்கள் ஆரம்பிப்பதற்காக சுமார் 150 கோடி டாலர்கள் செலவிடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு செலவிடப்பட்டிருந்தும்கூட 30,000 அதிகப்படியான பள்ளி அறைகள் தேவைப்படுகின்றன. சிறிய வகுப்புகள் ஏற்படும் பட்சத்தில் 15,000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் தான் நிலைமையைச்சமாளிக்கலாம் போலிருக்கிறது. எல்லா நாடுகளிலுள்ளதுபோலவே இக் கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்கெல்லாம் மேற்கு ஜெர்மனியிலும் போதிய நிதி வசதி இல்லை.

வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக்குறைத்தால் தரம் உயருமா என்கிற விஷயம் குறித்து மேற்கு ஜெர்மன் கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர். குறைந்த மாணவர்களைக்கொண்டு வகுப்புகளை அமைப்பதினல் திறமையோ தரமோ உயருவதில்லை என்று ஒரு சர்வதேச பள்ளி விவரஸ்தாபன நிபுணர் டாக்டர் பிரிட்ஸ் ஸுயல் லோல்ட் அபிப்பிராயப்படுகிறார்.

இவர் இவ்விஷயத்தில் பல வையறிவதற்காகக்சில பரீட்சைகளை நடத்தினர். சிறுவர் சிறுமிகளை பல பிரிவினர்களாகப் பிரித்து 60 நிமிஷங்களில் 50 கணக்குகளைப் போட அவர் ஏற்பாடு செய்தார். இதன் பலன் 20 பேர்கள் கொண்ட சிறிய வகுப்பும் 40 பேர்கள் கொண்ட பெரிய வகுப்பும் ஏறக்குறைய ஒரே கால அளவில்தான் இக்கணக்குகளைப் போட்டனர். சிறுமியர்கள் இவைகளை இன்னும் திறமையாகச் செய்தனர். வகுப்புகள் சிறியதாக இருப்பதினலும்பெரிதாக இருப்பதினலும் திறமையோ அல்லது தரமோ பாதிக்கப்படுவதில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதனல் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்ற முயற்சிகள் இனி கைவிடப்படும் என்று அர்த்தமில்லை வகுப்புகளில் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் ஆசிரியர்கள் ஒவ்வொரு குழந்தைகள் விஷயத்திலும் விசேஷ அக்கறை காட்ட முடியும் என்பது மறுக்க முடியாததாகும்.

## மின்னல் தாக்குதலிலிருந்து தப்பினர்

கொழும்பு, புதன்

பாணந்துறை, மொறவின்ன என்ற இடத்திலுள்ள தச்சுத் தொழில் பாடசாலைக்கருகிலுள்ள ஓலை வீடொன்றை மின்னல் தாக்கியதில் தெய்வாதீனமாக அங்குள்ளவர்கள் உயிர் தப்பினர். அச்சமயம் வீட்டில் இருந்த ஏழு பேர்களில் ஒரு சிறுமிக்கு மட்டும் சிறிய காயங்கள் ஏற்பட்டது.

இரவுச் சாப்பாட்டுக்காக, அவ்வீட்டிலுள்ளோர் குசினிக்குள் சென்றனரென்றும், அப்பொழுது எதிர்பாராதவிதமாக மின்னல் ஏற்பட்டதென்றும் இதன் காரணமாக வானொலிப் பெட்டியொன்று சேதமாகியதென்றும கூறப்படுகிறது.

மின்னல் தாக்குதலினல் கூரைச் சுவரும், ஏராளமான தென்னை மரங்களும் சேதமாகின.

## இந்திய பேராசிரியர் இலங்கை வருவார்

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்க மைசூர் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். கே. ஏகாம்பரத்தை இந்திய அரசாங்கம் அனுப்பும். கொழும்புத் திட்டத்தின் கீழ் வரவிருக்கும் அவர் தொடர்ச்சியான பல சொற்பொழிவுகளை நிகழ்த்துவார் ஏப்ரல் 20-ந் திகதி தன் மனைவியுடன் வரவிருக்கும் அவர் 15 தினங்கள் இலங்கையில் தங்குவார்.

## அரசியலே மக்களைப் பிரிவு படுத்துகிறது

— பிக்கு

மொரட்டுவா, புதன்

முந்நாட்களில் சாதி வேற்றுமைகளும் வகுப்பு வேற்றுமைகளும் சமய, சமுதாய முன்னேற்றங்களுக்கு தடையாயிருந்தன. ஆனல் இப்பொது மக்களைப் பிரிவு படுத்தும் அரசியல் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது'.

இவ்வாறு பூஜிநாரத தேரோ மொரட்டுவா பௌத்தமண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார் தர்மபாதா பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இங்கு பரிசில்கள் வளங்கப்பட்டன.

நாரததேரோ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அரசியலில் எதிர்க்கட்சிகளிடையே ஏற்படும் சச்சரவுகளால் குளப்பநிலை ஏற்பட்டுள்ளது. இவ்விதகுழப்பங்களுக்கு காரணமான அரசியலுக்கு முதலிடம் அளிக்கப்படடுள்ளது. இதைவிட முக்கியம் வாய்ந்த, சமுதாயத்தை வளர்க்க கூடிய சமயம், ஒழுக்கம் கலாசர்ரம் இவற்றுக்கு இங்கு உரிய மதிப்பு அளிக்கப்படுபதில்லை. இவைகள் ஒதுக்கப்பட்டுவிட்டன.

அரசியல் கட்சியிலிருந்தோ கட்சிகளிலிருந்தோ பிரதிநிதிகளைத் தோந்தெடுக்கப்படாது சகல மக்களிடையேயிருந்தும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அந்தப்பிரதிநிதிகளிடம் அரசாங்கம் நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கலாம். சமயமும் ஒழுக்கமும் முக்கிய இடம்பெற்று தகுந்த ஆதரவு பெற்று வளரும்.

நாட்டில் வளர்ந்துவரும் அபாயகரமான நிலைகள் பற்றியும் ஒழுக்கக்கேடுகள் பற்றியும் தற்கொலைகள் பற்றியும் குறிப்பிட்டு நாரததேரோ கூறுகையில் பாடசாலை மாணவர்கள் சினிமா பாப்பது தடைசெய்யப்படவேண்டும். வியட்னமில் 20 வயதுக்குக் குறைந்தவர்கள் பொதுத்தியேட்டர்களில் சினிமாபாக்கக் கூடாது என சட்டம் இயற்றப்பட்டுள்ளது. என்றுர்.

செனட்டர் தோமஸ் அமரசூரியா பேசியபோது:

கொலைகளும் மூர்கத்தனமும் இங்கு வளர்ந்து வருகின்றன ஒழுக்கக் கேடுகள் தான் இங்கு அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கும், கொலைகளுக்கும் காரணம். இவற்றைக்குறைத்து நாடு நல்லவழியில் செல்வதற்கு வகைசெய்யவேண்டுமாயின் இளைஞர்கள் சமுதாயத்துக்கு தர்ம விதிகள் பற்றி அறிவுறுத்தவேண்டும்.

உதவி வித்தியாபதி திரு. ஏ. வி. டி சொய்சா, திரு. டி. ஒவன் ஆர். பீரிஸ் ஆகியோரும் பேசினர்.

## 'பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதால்...
### பௌத்தர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்'

களுத்துறை, புதன்

"பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதினல். முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பௌத்தர்கள்தான். கத்தோலிக்கரோ, முஸ்லிம்களோ அன்றி கிறிஸ்வர்களோ இதனல் பாதிக்கப்படவில்லை. தங்களது ஸ்தாபனங்களை வைத்திருக்க இவர்களுக்கு இன்னும் உரிமையிருக்கிறது" என்று டெடியவெல என்ற இடத்திலுள்ள ஞாயிறு பாடசாலை பரிசளிப்பு விழாவில் திரு. டபிள்யு. கே. விஜயமன்ன பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- "பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் கல்வியின் தரம் குன்றிவிட்டது என்று தான் சொல்லலாம். பொதுவாக எல்லாமே குழப்பமாகிவிட்டது. பௌத்த மதத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மத அறிவு இருக்க வேண்டியது அவசியம் இதை ஞாயிறு பாடசாலை இயக்கம் ஒரு வகையில் தீர்த்து வைக்கும்."

## புகைத் தடுப்பு இயக்கம்
### சுகாதார அமைச்சு ஆரம்பிக்கும்

கொழும்பு, புதன்

புகைப்பதிலிருந்து மக்களைத் தடை செய்யும் முகமாக, நாடு பூராவும் புகைப்பதைத் தடுக்கும் இயக்கமொன்றை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. புற்றுநோய் வருவதற்கு புகைப்பது ஒரு காரணமென்று ரோயல் கல்லூரி வைத்தியர்கள் அண்மையில் வெளியிட்ட அறிவித்தலைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கம் இதுபற்றி குறிப்பிட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சு இந்த முடிவுக்கு வந்துள்ளது.

இதுபற்றி சுகாதார அமைச்சு ஆதிகாரியொருவர் தெரிவிக்கையில் இந்த இயக்கத்தின் முதல் நடவடிக்கையாக, புகைப்பதினல்வரும் தீமைகள்பற்றி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சுவரொட்டிகள் மூலம் எச்சரிக்கை செய்யப்படுமென்றும் பின்னர், பிரசாரக் கூட்டங்களை இவ் இயக்கம் நடத்துமென்றும் இதில் கலந்து கொள்ள புற்றுநோய்ச் சங்கமும் அழைக்கப்படுமென்றும் கூறினர்.

## கைமோசக் கொலைக்கு தண்டனை

யாழ்ப்பாணம், புதன்

வட பகுதி அசைஸ் 'கோர்ட்டில்' இன்று கிளிநொச்சி கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியான கந்தன் தங்கராசா கைமோசக் கொலை புரிந்த குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதியரசர் டாக்டர் எச். டபிளியூ. தம்பையா கியூ. வி. எதிரிக்கு மூன்று வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

வேலன் நாகன் என்ற நாகலிங்கத்தை 1961-ம் ஆண்டு மே மாதம் 29-ந் திகதி கொலை செய்ததாக இவ்வழக்கில் எதிரிமீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## 'வலதுசாரி ஆபத்து'

புதுடில்லி, மார்ச் 21

கம்யூனிஸ்டுகளைவிட வலதுசாரிகளிடமிருந்துதான் நாட்டுக்கு மிகப்பெரிய அபாயம் ஏற்படும் என திரு. நேரு கூறினர்.

## டென்னிஸ் போட்டி

தெல்லிப்பழை, புதன்

வீமன்காமம் ஆங்கில பாடசாலை மைதானத்தில் முத்துக்குமாரு இல்லத்திற்கும் சின்னத்தம்பி இல்லத்திற்குமிடையே நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் முத்துக்குமாரு இல்லம் 6-0, 6-1, புள்ளிகளால் வெற்றியீட்டியது.

## யாழ்ப்பாணத்தில் சிப்பி கண்காட்சி



யாழ்ப்பாணம், வியா

"தான் ஒரு சிறந்த கலைஞன் என்பதை, செல்வன் யோகநாதன் சரவணமுத்து, இக் கண்காட்சி மூலம் எடுத்துக்காட்டி விட்டார். இவரைப் போன்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் நம்நாட்டில் இருந்தால் கலை வளர்ச்சிக்கு குறைவிருக்காது" என்பது உண்மை என்று நேற்று மாலை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் நடைபெற்ற சிப்பிக் கண்காட்சிக்கு விஜயம் செய்த யாழ்ப்பாணம் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் கூறினர்.

இந்தக் கண்காட்சிக்கு பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர். யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டு நீதிபதி திரு. தனபாலசிங்கம், முதலியார் முத்துத்தம்பி ஆகயோர் செல்வன் யோகநாதன் சரவணமுத்துவின் (17 வயது) கலைத்திறனைக் குறித்துப் பாராட்டினர்கள். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபரும், ஆகிரியர்களும் இக்கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட ஒழுங்கு செய்திருப்பதாயும், மத்திய கல்லூரியில் மேற்படி கண்காட்சி இம்மாதம் 30 ம், 31 ம் திகதிகளில் நடைபெறும் எனவும் தெரிகிறது.

## ஸ்ரீமதி கென்னடி பாகிஸ்தான் சேர்ந்தார்

புதுடில்லி, மார்ச் 21

9 நாள் சுற்றுப்பிரயாணம் செய்த பின் அமெரிக்க ஜனதிபதியின் மனைவி ஸ்ரீமதி கென்னடி இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டு லாகூருக்குச் சென்றுர். பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும், இதர மந்திரிகளும் அவரை அங்கு வரவேற்றனர்.

புதுடில்லியில் பிரதமர் நேரு, ஸ்ரீமதி விஜயலட்சுமிபண்டிட் ஆகியோர் உட்பட பலர் ஸ்ரீமதி கென்னடியை வழியனுப்பி வைத்தனர். பிரதமர் நேரு ஸ்ரீமதி கென்னடியின் இனிய குணத்தைப் புகழ்ந்து அவர் மறுபடியும் இந்தியா வருவார் என நம்புவதாயும், ஜனதிபதி கென்னடியின் விஜயத்தை தாம் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாயும் கூறினர்.

நேருவின் இல்லத்தில் நடைபெற்ற ஹோலிபண்டிகையில் ஸ்ரீமதி கென்னடி கலந்து கொண்டார். திரு. நேரு அவரது நெற்றியில் சிவப்பு பொடியை பூச, பதிலுக்கு ஸ்ரீமதி கென்னடியும் நேருவின் மீது பூசினர். ஸ்ரீமதிக்கு 2 புலிக்குட்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்தியாவைவிட்டுச் செல்வது தமக்கு வருத்தமாய் இருப்பதாயும், இங்கு கழித்த நாட்கள் அனைத்தும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பதாயும் ஸ்ரீமதி கென்னடி கூறினர்.

## நரசிம்மன் புறப்பட்டார்

கொழும்பு, புதன்

ஐ. நா. பிரதம உதவிப் பொதுக் காரியதரிசி திரு. நரசிம்மன் இன்று கட்டுநாயக்காவிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டார். அதற்குமுன் அவர் பிரதமர், நீதிமந்திரி, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோரைச் சந்தித்துப் பேசியதுடன் கவர்னர் ஜெனரலையும் சந்தித்தார்.

## ரூ. 2450 திருடினர்
### 28-ந் திகதி தீர்ப்பு

மாவிட்டபுரம், புதன்

பண்டாரவளையைச் சேர்ந்த தங்கவேலு சுப்பிரமணியம்என்னும் 15 வயது இளைஞன்தெல்லிப்பழை கிருஷ்ண ஸ்டோர் முதலாளியான பொன்னையா கண்ணப்பர் என்பவருடைய வீட்டில். செவ்வாய்க்கிழமை காலைரூபா 2450ஐ திருடியதாக சுன்னகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெல்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி எதிரியை இம்மாதம் 28-ம் திகதிவரை ரிமாண்டில் வைத்து தீர்ப்பையும் அத்திகதிக்கு ஒத்திவைத்தார்.

கண்ணப்பர் வீட்டில் எதிரி இம்மாதம் 10-ம்திகதி தொடக்கம் பணியாளராகக் கடமையாற்றினர் என்றும் நேற்றுக் காலை கண்ணப்பர் இல்லாத சமயம் எதிரி பணத்தை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டிவிட்டாரென்றும் கூறப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிசார் கண்ணப்பரின் உதவியுடன் சாவகச்சேரி ரயில்வே நிலையத்தில் வைத்து எதிரியைக் கைது செய்தனர். இவரிடமிருந்து பணமாக 1683ரூபா 15 சதமும் 2 மோதிரம், ஒரு தங்கச்சங்கிலி உட்பட 700 ரூ. பெறுமதியான பொருள்களும கைப்பற்றப்பட்டன. இப்பொருள்களை திருடிய பணத்தில் இருந்து வாங்கியதாக எதிரி பொலிசாரிடம் கூறினர். சாவகச்சேரிப் பொலிசாரிடமிருந்து சுன்னகம் பொலிசார் எதிரியைப் பொறுப்பு ஏற்றனர்.

# அட்டாளைச் சேனையிலும் தொழில் வழிகாட்டு வகுப்பு வேண்டும்

## இஸ்லாமிய அரசினர் ஆசிரியர்சங்கம் கோரிக்கை

மட்டக்களப்பு, புதன்

"ஆசிரியர்களுக்காக மட்டக்களப்பில் நடத்தப்படும் தொழில் வழிகாட்டு வகுப்பைப்போல, மட்டக்களப்புத் தென்பகுதி ஆசிரியர்களின் நன்மையை முன்னிட்டு அட்டாளைச்சேனையிலும் ஓர் தொழில் வழிகாட்டு வகுப்பை நடத்தும்படி இச் சங்கம் வித்தியாதிபதியைக் கேட்கின்றது."

அகில இலங்கை இஸ்லாமியர் அரசினர் ஆசிரிய சங்க கிழக்குமாகாணக் கிளைக் கமிட்டிக் கூட்டம், அதன் தலைவர் ஜனாப் ஜே. எம். எம். அபீதுல் காதர் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் வெகு தூரத்திலுள்ள ஆசிரியர்கள், மட்டக்களப்பில் நடைபெறும் வகுப்பில் கலந்துகொள்ள முடியாமலிருப்பதாகவும், மட்டக்களப்பின் தென்பகுதி ஆசிரியர்களின் நலனை முன்னிட்டு அட்டாளைச்சேனையில் ஓர் வகுப்பை ஆரம்பிப்பது அவசியமென்றும் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

இவ் வருட ஆசிரியர் பயிற்சிக்காக கிழக்கு மாகாணத்திலிருந்து மிகக் குறைந்த தொகையினரே தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், கூடிய தொகையினரைக் கிழக்கு மாகாணத்திலிருந்து முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக்கல்லூரிக்குத் தெரிவுசெய்யும்படி கல்வியமைச்சரைக் கேட்டுக்கொள்வதென்றும், இதையிட்டு அமைச்சருக்கு ஓர் மகஜர் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பயிற்சி வகுப்பை முதலில் கல்முனையில் ஆரம்பிப்பதென்றும், வகுப்பில் கலந்துகொள்ள விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் தொகைக்கேற்ப, வேறிடங்களுக்கு இவ் வகுப்பை விஸ்திரிககவேண்டுமென்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# ஏற்றத்தாழ்வுகளை மறந்து சமூகசேவையில் ஈடுபடவேண்டும்

## பிரிவுபசாரக் கூட்டத்தில் பேச்சு

நீர்வேலி, புதன்

"சமூக சேவை, கிராமாபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்து செயற்படுத்துவதற்கு பொது மக்களது ஒத்துழைப்பு இன்றி அரசாங்க உத்தியோகத்தர்களால் எதுவும் செய்யமுடியாது. சமூக ஏற்றத் தாழ்வுகளை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக அபிவிருத்தி வேலைகளுக்கு பொதுமக்கள் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்குவது அவசியம்."

இவ்வாறு யாழ்ப்பாணம் கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளராகவிருந்து மாற்றம் பெற்றுச் செல்லும் திரு. கே. எஸ். முத்துவேற்பிள்ளை வலிகாமம் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார். இப்பிரிவுபசாரக் கூட்டம் சமாச உபதலைவர் திரு. கே. இராசரத்தினம் தலைமையில் நீர்வேலி கந்தசாமி கோயில் வீதியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க உதவி அதிபர் திரு. ஏ. டி. மூர்த்தி பேசுகையில் அரசாங்க ஊழியர்கள் நேர்மையுடனும் விசுவாசத்துடனும்சேவை செய்யவேண்டுமென்றும், அப்பொழுதுதான் நாட்டில் பொருளாதார, சமூக அபிவிருத்தி ஏற்படுமென்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் திரு. ஏ. முருகேசு, திருமதி வேதவல்லி கந்தையா ஆகியோரும் பேசினர்.

# பொருளாதார அபிவிருத்திக்கு கைத்தொழில் திட்டங்கள்

## அருந்ததியர் சங்க மகாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, புதன்

தமது சமூக மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய சிறு கைத்தொழில் திட்டங்களை ஆரம்பித்து அதன் மூலம் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய நெருக்கடிகளைத் தீர்க்க வழிசெய்வதென அகில இலங்கை அருந்ததியர் சங்க 30-வது ஆண்டு விழாவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பின்கண்ட தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன;

தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பிரிவினரான அருந்ததிய (தமிழ்) மக்களின் வாழ்க்கையில் சிறப்பான தன்மைகள் திகழ்வதற்குத் தடையாக இருப்பவற்றை, சமூகத்தின் உள்ளும் புறமும் நீககுவதற்கு தொடர்ந்து பாடுபடுவது.

ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை கல்வி பயிலும் வயதும், தகுதியும் உடையவருக்குத் தேவையான உதவிகளைச்செய்து சமூகத்தின் தற்போதைய கல்வித் தரத்தை உயர்த்த வழி செய்வது.

இயல், இசை, நாடகம், ஓவியம், எழுதது, பேச்சு ஆகிய நுண்கலைகளில் சமூக மக்களின் ஈடுபாட்டினை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது.

பிறப்பு, இறப்பு, ருது, திருமணம் ஆகிய குடும்ப நிகழ்ச்சிகளின்போது அவைகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து' வாழ்த்து, வரவேற்பு' பாராட்டு, நன்றி கூறல், அனுதாபம் போன்ற பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுவது.

நமது சமூக மக்கள் ஈடுபட்டு இருக்கும், ஈடுபட விரும்பும் தொழில் துறைகளில் அவர்வர்க்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பது.

உடற் பயிற்சி, விளையாட்டுத் துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கும், ஈடுபட விரும்புவோருக்கும் உற்சாகமூட்டி ஆர்வத்தை வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது.

இன, மொழி, மத, கட்சி வேறுபாடற்ற முறையில் நமது சமூக மக்களுக்கும் பிற சமூக மக்களுக்கும் இடையில் நல்லெண்ணங்களை வளர்ப்பதற்கான சூழ் நிலைகளை உருவாக்குவது"

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருவாளர்கள் மு. வேலாயுதம் தலைவர்; அ. பி. சுந்தரராஜ் உபதலைவர்; கு. மு. இராசு பொதுச்செயலாளர்; கெ. கா. சிவஞானம், மா. சே. அருள் துணைச்செயலாளர்; பி. டி. லூக்கஸ் பொருளாளர்; செ. மு. இராமையா உபபொருளாளர்.

# சமயத்திற்கும் கலைக்கும் புத்துயிர் அளித்தார்

## அனுதாபக் கூட்டத்தில் பேச்சு

கொழும்பு, புதன்

காலஞ்சென்ற இராசமுத்து சதாசிவம் அம்மையாருக்கு அனுதாபம் தெரிவித்து சைவ மங்கையர் கழக நிர்வாக சபை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசிய ஸ்ரீமதி விஜயலட்சுமி நமசிவாயம் தமது சொற்பொழிவில் தெரிவித்ததாவது:-

நாங்கள் இன்று ஆழ்ந்த துக்கமான நிலையில் கூடியிருக்கிறோம். எங்கள் கருமங்களை ஆலோசிக்கு முன்பு நாம் நினைவு கூரவேண்டிய முக்கிய விடயம் ஒன்று இருக்கிறது. சென்ற முப்பத்திரண்டு வருடங்களாக இந்தப் பெரிய ஸ்தாபனத்தை அஸ்திவாரமிட்டு, வளர்த்துச் சிறப்பான நிலையில் அமர்த்திவைத்த சதாசிவம் அம்மையார் இன்று எங்கள் மத்தியில் இருந்து மறைந்து விட்டார்.

அந்தக் காலத்தில் சைவப் பெண்மணிகளுக்கும், பிள்ளைகளுக்கும் தங்கள் சமயத்தையும், கலையையும், கலாசாரத்தையும் கற்றுக் கொடுப்பதற்கு ஒரு ஸ்தாபனமும் இல்லையென்று உணர்ந்து இந்தக் கழகத்தையும் பின்னர் வித்தியாலயத்தையும் வளர்த்துத் தந்த அம்மையார் எங்களை விட்டுப் பிரிந்தது மறக்கமுடியாத நஷ்டமென்பதை நான் உங்களுக்கு செல்லத்தேவையில்லை. அமையார் வீட்டுக் கருமங்களுடன் இக் கழகத்தின் கருமங்களையும் மிகவும் சிரத்தையுடன் நடத்திவந்தார். நம் சகோதரிகளும் பிள்ளைகளும் மேல் நாட்டு நாகரிகத்தில் தோய்ந்திருந்த காலத்தில், எங்கள் சமயத்திற்கும் கலைக்கும் புத்துயிர் அளித்து; பல சாதியினரும் மதத்தினரும் வாழும் இந்தக் கொழும்பு நகரில், தமிழரின் கலையும் மொழியும், நாகரிகமும் உலகம் தோன்றிய அன்றே தோன்றியனவென்று நிரூபித்துக்காட்டிய சிறப்பு இவ்வம்மையாருக்கே உயியது. மனித வாழ்க்கையே அநித்தியம். அவர் மறைந்து விட்டாலும் அவரினுடைய ஆவி எங்களுடனிருநது ஊக்கம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த அரும் பெரும் தொண்டைப் பல காலங்களாக உற்சாகத்துடனும், சலியாத மனத்துடனும் செய்து எங்களுக்கு ஒரு பொக்கிஷமாக அளித்த இந்த இரு ஸ்தாபனங்களையும் பேணி வளர்ப்போமானால் அவருடைய பரிசுத்த ஆன்மா சாந்தியடையும். பிரதானமாக வித்தியாலயத்தைக் கொண்டு நடத்துவதற்கு வேண்ய பொருளைச் சேகரிப்பது எங்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

யாழ்ப்பாணம் கல்லூரிகளெல்லாம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு விட்டன. என்றாலும் எங்கள் சமயமும் கலையும் அங்கு பாதிக்கப்படவில்லை. ஆனால் இந் நகரில் பல சாதியினர் வசிக்குமிடத்தில் எங்கள் வித்தியாலயத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்தால் எங்கள் சமயமும் பாஷையும் அழிந்தே போகும்.

### எதிர்க்க ஒரு கட்சி!

ஜோர்ஜ்டவுன், மார்ச் 21

பிரிட்டிஷ் கயானாவுக்கு தற்சமயம் சுதந்திரம் வழங்குவதை எதிர்க்கும் ஒரு புதிய கட்சி பிரிட்டிஷ் கயானாவில் உருவாகியுள்ளது. முன்னாள் சட்டசபை அங்கத்தவரும் சீன வழக்கறிஞருமான திரு. தியோபிலஸ் லீ யின் தலைமையில் இந்தக் கட்சி தோன்றியிருக்கிறது.

# மாநகரசபைக் கடைகளிலும் கருவாடு விற்பதில் மோசடி?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பண நகரில் கருவா வாங்குவதில் கஷ்டமிருப்பதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கருவாட்டுக் கடைகளிலேயே கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாகக் கருவாடு விற்கப்படுவதாகவும், விலைப்பட்டியலுக்கு மாருக விற்பனைசெய்யப்படுவதுசுட்டிக்காட்டப்படும் பொழுது விற்பனையையே வியாபாரிகள் நிறுத்திவிடுவதாகவும் தெரிகிறது.

கருவாட்டை கட்டித்தொங்கவிட்டுக்கொண்டு விற்பனை செய்ய மறுக்கும் வியாபாரிகள் மீது உணவுக் கட்டுப்பாட்டு இலாகா கடும் நடவடிக்கை எடுத்துவந்தாலும் இன்னமும் இந்நிலைமை யாழ்ப்பாண நகரில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வாதநோய்தடுப்பு நடவடிக்கை: டாக்டர்களுக்கு அறிவித்தல்

## பொது மக்கள் கவனத்துக்கு சில விதிகள்

கொழும்பு, புதன்

இளம்பிள்ளை வாத நோய் பரவாது தடுக்க சகலவித நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சுகாதார சேவை டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்ன சகல டாக்டர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த வாத நோய் எவ்விதம் பரவுகிறது என்பது பற்றியும் இந் நோய் பரவாது தடுக் எவ்வித தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது பற்றியும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென வைத்திய அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

கீழ்க்கண்டவற்றை அனுசரித்து நடக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கும்படி வைத்திய அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள்:

1. உணவு அருந்து முன்னரும் அருந்திய பின்னரும் சவர்க்காரம் போட்டுக்கையை அலம்பவேண்டும்.
2. உணவுப் பண்டங்களில் ஈக்கள் மொய்க்காதவாறு கணகாணித்துக் கொள்ள வேண்டும். காய்கறிகளை ஆக்குவதற்கு முன்னர் நன்ருகத் தண்ணீரில் கழுவ வேண்டும்.
3. இயன்ற மட்டில் ஜனக் கூட்டமுள்ள இடத்துக்குப் போகாது விடவேண்டும்.
4. காய்ச்சல் வந்துவிட்டால் மிக எச்சரிக்கையோடு சிகிச்சை பெறவேண்டும். காய்ச்சல் வந்த ஒரு வாரகாலத்துக்காவது படுக்கையில் படுத்து ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது".

பாரிசவாதம் பரவாது தடுக்க கீழ்க்கண்ட முறைகளைக் கையாளுமாறு சுகாதார டைரக்டர் வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இந் நோய் பரவியுள்ள பகுதியிலுள்ள சிறுவர்களுக்கு உள்நாக்குவளர்ந்திருந்தாலோ, மூக்கினுள் சதை வளர்ந்திருந்தாலோ ஆப்பரேஷன் செய்யக்கூடாது.

தசை நார்களை இறுக்கிப் பிடிக்கக் கூடிய ஊசிகளைப் போடாதிருப்பது நல்லது.

கொழும்பு பிரதம வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் வி. நடராஜா மேலும் சில தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

1. தண்ணீர் (கிணற்றிலிருந்து பெறப்படுவதானல்) நன்ருகக் கொதிக்க வைத்த பின்னரே பாவிக்கக வேண்டும். பாலையும் நன்ருகக் காய்ச்சிய பின்னரே பருக வேண்டும்.

2. மலசலகூடத்தைத் துப்பரவாக வைத்துக்கொள்ள வேண்டும். மலசலகூடத்தில் வாளிஉபயோகுக்கப்படுவதாகவிருந்தால் ஒவ்வொரு முறையும் உபயோகித்த பின்னர் மண்ணையோ அல்லது சாம்பலையோ மேலே போட்டு விடவும்.

3. தெருவீதிகளில் தின்பண்டங்களை விற்பனை செய்பவரிடமிருந்து தின்பண்டங்களை வாங்கி அருந்தாதீர்கள்.

4. உங்கள் வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் இருமும் போதும் மூக்குச் சீறும் போதும் கைக்குட்டைகளை உபயோகிக்குமாறு பார்த்துக் கொள்ளவு ı.

5. உங்கள் குழந்தைகள் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளையும் புறம்பாக எடுத்து வைக்கவும்.

6. வீடு, வளவுகளைத் துப்பரவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

# தொழிற்கோடு நீதியரசர்கள்

## தொழில் அமைச்சர் நியமிப்பார்

கொழும்பு, புதன்

இவ்வருடத்திற்கான தொழிற்கோர்டு நீதியரசர்களைத் தொழில் தேசியசேவை மந்திரி திரு. எம். பி. டி. சற். சிறிவர்த்தன நியமனம் செய்வார்.

சென்ற ஆண்டில் நியமிக்கப்பட்ட தொழிற்கோர்டு நீதியரசர்கள் சேவைக்காலம் இம் மாதம் 3-ம் திகதியுடன் முடிவடைந்தது. இந்தவாரம்முடியு முன்னர் தொழில்மந்திரி புதிய குழுவை நியமிப்பார்.

புதிய நீதியரசர்கள் பலரைத் தொழிற்கோர்ட் நீதியரசர் குழுவில் மந்திரி நியமிக்கவிருக்கிறுர் எனத் தெரிகிறது. வழக்கமாக 20—25 நீதியரசர்கள்வரை இந்தக்குழுவில் நியமிக்கப்படுவார்கள். இவ்வருடமும் அதே அளவு நீதியரசர்கள் நியமிக்கப்படுவர்.

# இந்தியக் கலைஞர் வருகை

## இ. ஐ. அ. சங்கம் அறிக்கை

"இலங்கை வாழ் இசைக் கலைஞர்கள், தமது சுயதேவைப் பூர்த்தியைக் கவனித்துக் கொண்டே இந்தியக் கலைஞர்கள் வருகையை கட்டுப்படுத்த வேண்டும். இந்தியக் கலைஞர்கள் இங்குள்ள இசையாளர்களின் வாழ்க்கைக்கு இடர் விளைவிக்கின்றார்கள் என்பது பொருந்தாது. அவர்களை இங்கு வருவிப்பவர்களே வீண் செலவுகளை ஏற்படுத்தி அல்லலுறுகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க இந்தியக் கலைஞர்கள் வருவதைக் கட்டுப்படுத்தும்படி கோருவது அர்த்தமற்ற செயலாகும்" என்று யாழ்ப்பாணம் இசையாளர் சங்கம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது:-

பாரம் பரியமாக ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் நிலவும் கலைத் தொடர்பைத் துண்டிக்க வேண்டும் என்று விரும்பும் சிலரால் தற்போது பல பிரச்சினைகள் கிளப்பப்பட்டுள்ளன. இதனல் கலைஞர்களிடையே போட்டியுணர்ச்சி தலைதூக்கியுள்ளது.

# கிரிக்கெட் வீரர் கன்டிராக்டர் நிலைமையில் அபிவிருத்தி

## சத்திர சிகிச்சைக்குப் பின் நேற்று உணவு அருந்தினர்

பிரிடஜ்டவுன், மார்ச், 21

மேற்கிந்திய தீவில் இப்பொழுது கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கும் இந்திய கோஷ்டியைச் சேர்ந்த வீரர் நாரி கன்டிராக்டர் சத்திரசிகிச்சைகுப்பின் நேற்று முதல்தடவையாக உணவு உட்கொண்டார்.

கிரிக்கட் பந்து தலையில் விழுந்து மண்டை உடைந்ததால் சத்திரசிகிச்சை செய்ய வேண்டி ஏற்பட்டது. ஆறு மணி நேரம் போராடி டாக்டர்கள் சிகிச்சை அளித்து திரு. கன்டிராக்டரின் உயிரைப் பாதுகாத்தனர்.

உயிருக்கு ஆபத்து இல்லையென்று நேற்று வெளியான வைத்திய அறிக்கை யொன்று தெரிவித்தது.

தமது கணவரின் அருகிலிருந்து பணிவிடை செய்வதற்காக கன்டிராக்டரின் மனைவி திருமதி டாலி கன்டிராக்டர் நேற்று பம்பாயிலிருந்து பிரிட்ஜ்டவுனுக்கு விமானத்தில் பிரயாணமானர்.

---

### டாக்டர்களின் தனிப்பட்ட வைத்தியம்?

கொழும்பு, புதன்

தனிப்பட்ட வைத்தியம் செய்வதற்கு அரசாங்க வைத்தியர்களுக்குள்ள சலுகைகள் ரத்துச் செய்வதுபற்றிச் சுகாதார அமைச்சர் அரசாங்க வைத்தியர்கள் சங்கத் தூது கோஷ்டியுடன் கலந்தாலோசிக்கவிருக்கிறார்.

அரசாங்க வைத்தியர்கள் சங்கத்தின் செயல் கமிட்டி, சங்கத் தூதுகோஷ்டியினரைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு கூட்டம் கூடியது. தூதுகோஷ்டியினரும், மந்திரியும் நடாத்தும் பேச்சுவார்த்தைகளின் போது மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி, சுகாதார சேவை டைரக்டர் ஆகியோரும் சமுகமளிப்பர் எனத் தெரிகிறது.

இலங்கை வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தூதுகோஷ்டி ஒன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தது.

தனிப்பட்ட வைத்தியம் செய்யும் சலுகையை ரத்துச் செய்வதற்கு நிபுணர்கள் சங்கம் மறுப்புத் தெரிவிப்பதன் காரணங்களைப் பிரதமருக்கு விளக்கிக் கூறுவதற்கு, தூது கோஷ்டியுடன் சுகாதார மந்திரியும், பார்லிமெண்டரிக் காரியதரிசியும் சென்றிருந்தார்கள். நிபுணர்கள் சங்கத் தூது கோஷ்டி பிரதமருடன் ஒன்றரை மணித்தியாலம்வரை பேச்சுவார்த்தைகள் நடாத்தியபோதும் எதுவித முடிவுத் தீர்மானங்களும் செய்யப்படவில்லை.

வைத்திய நிபுணர்கள் சங்கத்தினர் திரும்பவும் பிரதமரைச் சந்திக்கவிருக்கிறார்கள்.

---

### வானொலி நிகழ்ச்சிகள்

#### கொழும்பு.

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வியாழன் 22-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாமாலை.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'கல்ப்பை பிடித்தகை'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

#### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பி. யோகாம்பாள்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 டி. எஸ். சுப்புலட்சுமி—புல்லாங்குழல், 1-30 குரல் இசை, 1-50 வாத்திய இசை, 2-10 பி. யோகாம்பாள்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல்கள், 7-35 எஸ். சுந்தரராமன்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி கே. ஆர். கணபதி—புல்லாங்குழல், 8-40 திரைப்பட இசை, 9-15 ரேடியோநாடக இசை, 9-30 அகில பாரத நாடகம்.

---

### கடத்தல் கள்ளத் தங்கம்

புதுடில்லி, மார்ச் 20

1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ள் முதல் திகதிக்கும் 1961-ம்ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதிக்குமிடையில் 1,64,76,000 ரூபாய் மதிப்புள்ள தங்கம் கள்ளத்தனமாக இந்தியாவுக்குள் கொண்டுவரப்பட்டபோது அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது என்று நிதி இலாகா உதவி மந்திரி திரு. பகத் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

### சென். அன்ரனிஸ் கிளப் மாதாந்தக்கூட்டம்

சுன்னுகம், செவ்வாய்

சுன்னுகம் சென். அன்ரனிஸ கிளப்பின் மாதாந்தக் கூட்டம் சென்ற ஞயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் சென். அன்ரனிஸ் தேவாலய மைதானத்தில் உபதலைவர் திரு. ம. கிறிஸ்துதாஸ் தலைமையில் நடைபெற்றது. நடப்புவருட கிரிக்கட் காப்டனுக திரு. அ. அருள்ப்பிரகாசமும் உதவி காப்டனுக திரு. ம. சந்தியோகுவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### மேல் சபைக்கு 7 பேர் தெரிவு

சென்னை, மார்ச் 20

தமிழ் நாடு சட்ட சபையின் மேல் சபைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் கே. ராஜாராம், கே. ராமதாஸ், கே. பழனிசாமி கவுண்டர், பொன்னுசாமி வில்லவராயர், ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார் ஆகியோரும் தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு எம். ஜி. ராமச்சந்திரனும் முஸ்லிம் லீக்கின் சார்பில் ஜனப் அப்துல் வஹாபும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரி திரு. ஹனுமந்தப்பா தெரிவித்தார்.

### அவருக்கே தெரியாது!

மாட்ரின், மார்ச் 21

அல்ஜீரிய தேசிய அரசாங்க பிரதம மந்திரி யூசுப் பென்கெடா தாம் எப்பொழுது அல்ஜீரியாவுக்குச் செல்வதென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும் அல்ஜீரியா செல்லும் திகதிபற்றித் தமக்கே தெரியாதெனறும் கூறினர்.





குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூடத்தான் ஸல்லை ஆவலோடு எதிர்நோக்குகிறார்கள். ஸல்லுக்குள்ள பாலாடையின் அரும் சுவையும் தெவிட்டாத தித்திப்புமே இதற்குக் காரணம்! அதைத் தனிப் பால் பானமாகப் பருகி மகிழுங்கள் அல்லது டீயிலோ, கோப்பியிலோ, பாலுக்குப் பதில் சேர்த்துக்கொண்டு, அவற்றின் சுவையை அதிகரிக்கச் செய்யுங்கள். ஸல் உடன் கரைந்துவிடுகிறது.

ஸல்லைப் பாவிப்பதால் பணம் மிச்சமாகும். அதன் விலை சாதாரண மோல்டட் பாலை விட அதிகமில்லை. மேலும் அது பால் மற்றும் சீனியின் செலவைக் குறைக்கும்! இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் சென்று உங்கள் குடும்பத்தாரின் முகங்கள் மலருவதைக் காணுங்கள்!

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

ஸல்—குடும்பத்தார் உடன் விரும்புவது

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது


---

# 16 குடம் கள் பறிமுதல்

## ஐவர் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள மண்டபத்தடி என்னும் கிராமத்தில் சட்ட விரோதமாகக் கள் இறக்கியதாகவும், சட்டவிரோதமாக இறக்கிய கள்ளை வீட்டில் வைத்திருந்ததாகவும் குற்றம்சாட்டி ஐவரைக்கொண்ட கோஷ்டியொன்றை மட்டுநகர் பொலிசார் கைதுசெய்தனர்.

மட்டக்களப்புப் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஏ. கபூர், பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. அருணேசன் இரத்தினம் ஆகிய இருவரும் இரகசியமாகநடத்திய சோதனையின் போது இக் கோஷ்டியினரைக் கைதுசெய்தனர். இவர்களிடமிருந்து 16 குடம் கள்ளுப் பறிமுதல்செய்யப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட ஞானப்பிரகாசம் செல்லத்தம்பி, சின்னவன் கந்தப்பா, நாகப்பர் பாலசிங்கம், குமாரசாமி துரைசாமி, சவரிமுத்துநாடார் அந்தோனி ஆகிய ஐவரும் விசாரணை நடத்துமவரை பொலிஸ் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கட்டித்தங்கம் வெட்டியெடுத்து..

மாலை நேரம். இயற்கையின் அழகை ரசித்துக்கொண்டே வந்த கதாநாயகனுக்கு காதலியின் நினைவு வந்துவிட்டது. அவன் தன்னை மறந்து பாடுகிறான்.

"கட்டித்தங்கம் வெட்டி எடுத்து காதல் என்னும் சாறு பிழிந்து தட்டித்தட்டி சிற்பிகள் செய்த உருவமடா, அவள் தளதளவென ததும்பி நிற்கும் பருவமடா" என்று. பாட்டே இப்படி இருக்கிறது என்றால் அந்தப் பேரழகி எப்படி இருப்பாள்! ஆனால் அழகிருக்குமிடத்தில் ஆபத்து வரும் அவ்வழகியை எண்ணி ஏங்கிய அவனுக்கு அவள் கிடைக்கவில்லை அதை எண்ணி "நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும் கிடைக்கும் என்பார் கிடைக்காது, கிடைக்காதென்பார் கிடைத்துவிடும்" என்று பாடுகிறான் நாயகன்

இந்த இரு பாடல்களையும் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன் இசையமைத்தவர். கே. வி. மகாதேவன். பாடியவர் டி. எம். சௌந்தரராஜன். இப்பாடல்களை மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் டி. எஸ். ரங்கசாமி ஒலிப்பதிவு செய்தார். தேவர் பிலிம்ஸார் தயாரிக்கும் "தாயைக் காத்த தனயன்" படத்தில் இப்பாடல்கள் ஒலிக்கும். இப்படத்தை எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்து வருகிறார்.

## சிவாஜி—எம். ஜி. ஆர். ஒற்றுமை

"நானும் தம்பி சிவாஜி கணேசனும் சில காலம் பிரிந்திருந்தோம். தம்பியை ஒரு சிலரிடம் நான் விட்டுவிட்டிருந்தேன். ஆனால் மீண்டும் தம்பி என்னிடம் வந்துவிட்டார். நான் சமீபத்தில் ஒன்றை இழந்தேன். ஆக ஒன்றை இழந்து, இன்னொன்றைப்பெற்றதால் நஷ்டம் ஈடுசெய்யப்பட்டுவிட்டது. இனி எங்களுக்குள் எவ்விதமான பேதமும் கிடையாது. நாங்கள் ஒன்று சேர்ந்துவிட்டோம்."

—புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்

## சரவணப் பொய்கை
### சிவாஜி கட்டுகிறார்

சென்னை குசப்பேட்டை கந்தசாமி கோவிலுக்கு சரவணப் பொய்கை கட்டிக்கொடுக்க நடிகர் திலகம் சிவாஜி கணேசன, திருமுருக கிருபானந்த வாரியாருக்கு வாக்களித்துள்ளார்.

இதற்கான ஆக்கவேலைகளை சிவாஜி குடும்பத்தினர் கவனித்துவருகின்றனர். சிவாஜி அமெரிக்காவிலிருந்து திரும்பி வருவதற்குள் இது கட்டி முடிக்கப் கப்பட்டுவிடுமாம்.

## 1,200 ராட்டினங்கள் சீன வழங்கும்

மின்சாரத்திலால் இயங்கும் 1,200 ராட்டினங்களைச் சீன இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவிருக்கிறது. துணி உற்பத்தியை இலங்கை அதிகரிப்பதற்கு உதவு முகமாகவே சீன நூல் நூற்கும் மின்சார ராட்டினங்களை இலங்கைக்கு வழங்குகிறது.

இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நெசவு நிலையங்களுக்கும் இந்த ராட்டினங்கள் வழங்கப்படும்.

உற்பத்தியாகும் துணியின் தரத்தை உயர்த்துவதே கைத்தொழில் அமைச்சின் நோக்கமாகும் என அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார். இறக்குமதிசெய்யப்படும்ஜவுளிகளின் தரத்தைப்போல இங்கு உற்பத்தி செய்யும் ஜவுளியின் தரம் உயர்ந்தால் இறக்குமதியைக் குறைத்துக் கொள்ளலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# கலை அரங்கம்

## நடிகர் எம். ஜி. ஆர். மேல்சபை அங்கத்தவரானார்

தமிழ்நாடு சட்டசபையின் மேல் சபைக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சட்டசபைக் கொடைக்கானல் தொகுதியில் போட்டியிட உத்தேசித்து பின்னர் அதைக் கைவிட்ட நடிகர் எம். ஜி. ஆர். மேல் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

மேல்சபையில் நடிப்பிசைப்புலவர் திரு.கே. ஆர். ராமசாமி ஏற்கனவே அங்கத்தவராக இருக்கிறார்.

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு திரைப்படத் தொழில் தூதுகோஷ்டி

இந்தியப் படத்தொழிலின் சார்பில் நல்லெண்ணத் தூதுகோஷ்டியொன்று மேமாதம் முதல்வாரத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் புறப்படும். இந்தியாவின் மூன்று பிரதான படத் தயாரிப்புப் பகுதிகளின் பிரதிநிதிகள் இடம்பெறும் இத் தூதுகோஷ்டி ஈரான், ஈராக், துருக்கி, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறது.

தென்னிந்திய சினிமா வர்த்தகர் சபைத் தலைவர் திரு. ஏ. எல் சீனிவாசனும் தென்னிந்திய ஸ்டுடியோ உரிமையாளர் சங்கத்தின் தலைவரான திரு. பி. நாகிரெட்டியும் தென்னிந்தியப் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வார்கள்.

இத்தூதுகோஷ்டி மூன்று வாரகாலம் சுற்றுப்பிரயாணம் செய்து படத்தொழில் உரிமையாளர்களோடு பரஸ்பரம் படப் பரிவர்த்தனைபற்றியும் பேச்சுவார்த்தை நடத்தும்.

## ஆர்தர்மில்லர் திருமணம்

பிரபல ஹாலிவூட் நடிகை மர்லின் மன்ரோவின் மாஜிக் கணவரும் திரைக்கதைவசன கர்த்தாவுமான திரு. ஆர்தர் மில்லர் புகைப்படம்எடுப்பதைத்தொழிலாகக் கொண்டிருக்கும் இங்கிபோர்க் மொராத் என்னும் 38 வயதுப் பெண்ணை ஆடம்பரமற்ற முறையில் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார்.

## பாகிஸ்தான் படங்களுக்குத் தடை!

இந்தியப்படங்களை கோட்டா முறையில் இறக்குமதி செய்வது பற்றி பாகிஸ்தான் தனது முடிவைப் புனராலோசனை செய்யவில்லையென்றால் பாகிஸ்தானின் படங்களை இந்தியா தடைசெய்ய வேண்டுமென்று இந்திய அரசாங்கத்துக்கு பிலிம் பெடரேஷன் சிபார்சு செய்துள்ளது.

டால்ஸ்டாயின்

## 'போரும சமாதானமும்' திரைப்படமாகிறது

பிரபல ரஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாயின் போரும் சமாதானமும் என்ற உலகப் புகழ்பெற்ற நாவலை செர்கி-பொண்டார்சக் என்னும் ரஷ்ய நடிகர் திரைப்படமாக்குவதில் முனைந்துள்ளார்.

சீன அனுப்பும் மின்சார ராட்டினங்கள் திருப்தியானவையாகக் காணப்பட்டால், மேலும் அதிகமான ராட்டினங்களைச் சீனவிடமிருந்து கைத்தொழில் அமைச்சு இறக்குமதி செய்யும்.

## ராபர்ட் கென்னடியின் புத்தகம்படமாகிறது

அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடியின் சகோதரர் அட்டர்னி ஜனரல் ராபர்ட் ககன்னடி எழுதியிருக்கும் 'தி எனிமி வித்தின்' என்ற புத்தகத்தை அடிப்படையாகக்கொண்ட படமொன்று ஹாலிவூட்டில் தயாராகவிருக்கிறது. பிரபல தயாரிப்பாளரானஜெரிவால்டு இதற்கானஏற்பாடுகளில்தீவிரமாக இறங்கியுள்ளார்.

## திராவிட நாடு கோரிக்கைபற்றி
### திரு. அண்ணாத்துரை

சென்னை, மார்ச் 21

"திராவிடநாடு கோரிக்கையில் எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. திராவிடநாடு பிரிவினைக்கான கட்சியின் நிலையை அரசியல்வாதிகளிடமோ, அன்றி பத்திரிகைகளிடமோ மனமாற்றம் ஏற்படும் ரீதியில் எடுத்துச்சொல்ல இயலாமலிருக்கலாம். என்னிடம போதுமான அளவு வாதிக்கும் திறனில்லாதிருக்கலாம். ஆனால், திராவிடநாடு லட்சியத்தைஅடைவதற்காக யாரை வேண்டுமானலும் பின்பற்ற நான் தயார்.

சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் தி. மு. க. வுக்கு வோட்டளித்த 34 லட்சம் வோட்டர்கள் கட்சியையும் அதன் கொள்கையையும் பூரணமாக ஆதரித்துள்ளனர். திராவிடநாடு பிரச்சினையை அவர்கள் ஆதரிக்காமலிருக்கலாம். ஆனால், பிரிவினையைக் கோரிவரும் தி. மு. க. வை அவர்கள் ஆதரித்துள்ளனர்" என்று திரு. அண்ணாத்துரை இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சான்பிரான்சிஸ்கோ துறைமுகத்தில்
### வேலைநிறுத்தம்

சான்பிரான்சிஸ்கோ, மார்ச் 21

முதலாளிகளுடன் புதிய ஒப்பந்தம்பற்றிய பேச்சு முறிந்ததையொட்டி மேற்குக்கடற்கரையின் 3 துறைமுக ஊழியர்களின் சங்கங்களைச் சேர்த 6000 பேர் வேலைநிறுத்தம் செய்தனர். சான்பிரான்சிஸ்கோக் குடாவில் பல சரக்குக் கப்பல்களும், பிரயாணிகள் கப்பல்களும் முடங்கிக்கிடந்தன.

தங்கள் சரக்குக்கெடும் அபாயம் காரணமாகத் தலையிடுமாறு ஜனாதிபதி கென்னடிக்குக் கலிபோர்னியா பழ ஏற்றுமதியாளர்கள் தந்தி அனுப்பியிருக்கிறார்கள்.

## ஸ்ரீமதி இந்திராகாந்தி யு. எஸ். செல்கிறார்

புதுடில்லி, மார்ச் 21

அமெரிக்காவில் ஸ்ரீமதி இந்திராகாந்தி உரை நிகழ்த்துவதற்காக 1 மாத காலம் சுற்றுப்பயணம் செய்ய டில்லியிலிருந்து இன்று புறப்படுகிறார்.

மார்ச் 23வ யன்று அவர் நியூயார்க்கை அடைவார். இந்த சுற்றுப்பிரயாணத்திற்கு அமெரிக்காவிலுள்ள ஒரு ஸ்தாபனம் ஏற்பாடு செய்துள்ளது.

சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய இடங்களிலும் மற்ற நகர்களிலும் அவர் உரை நிகழ்த்துவார்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் இதர விஷயங்களைக் குறித்தும் அவர் உரை நிகழ்த்துவார்.

நாடு திரும்பும் போது பாரிஸில் நடைபெற விருக்கும் ஐ. நா. பெருளாதார சமூக கலாசார ஸதாபன (யுனஸ்கோ) கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடும்.

## ஹாங்காங்கில் பூமி அதிர்ச்சி

ஹாங்காங், மார்ச் 21

ஹாங்காங்கில் சமீபத்தில் பூமி அதிர்ச்சி அநேக செகண்டுகள் நீடித்ததன்விளைவாக தூங்கிக்கொண்டிரு த மக்கள் விழித்துக்கொண்டனர்.

சமீப வருடங்களில் இத்தனை பலமான பூமி அதிர்ச்சிஏற்படவில்லையாம். சேத விபரம் குறித்து உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

## தேசிய சட்ட..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளமுயற்சிக்கும் நாடு பாகிஸ்தான் ஒன்றுதான்.

அரசியல் திட்டத்தை மேலும் நுண்மையாக ஆராய்ந்தால் இன்னும்பல தனிச் சிப்பான அம்சங்களைக் கண்டுபிடிக்கலாம்.

( முற்றும் )

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பயிரும், இசைப் பயிரும் புது மலர்ச்சிபெற்றன. இப்படிப் பட்டவர்களை தருமை முதலிய ஆதீனத்தார் அடிக்கடி அனுப்பி வைப்பது பல விதங்களிலும் நல்லதாகும்.


## மெஷின் மைண்டர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு அனுபவம் வாய்ந்த சிலிண்டர்-பிளாட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. அச்சு இயந்திரம் பழுது பார்க்கும் அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்பெறும். விபரங்கட்கு X 25, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

C. N. தொடர்ச்சி இலக்க பீ. எஸ். ஏ. மோட்டார் சைக்கிள் (2.5) விற்பனைக்கு உண்டு கிழமை நாட்களில் காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பார்வையிடலாம். மற்றநாட்களில் கரவெட்டி தபால்கந்தோரில் பார்க்கலம்.

மார்ச் 23-ந் திகதி வெள்ளி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறந்த கலர் படம்!

பார்த்துப் பயன் அடையுங்கள்!

சித்திரா . அசாத்



கிருஷ்ணகுமாரி

நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி நடித்த

பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

மாலை 6-30 இரவு 9-30 க்கு

சிவாஜி கணேசன் - பத்மினி நடித்த

மரகதம்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்

NOTORIUS

(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.